# வெற்றிமுனை

பன்னாட்டுத் தமிழியல் மேம்பாட்டு மாத இதழ்

தனி இதழ் : ரூ. 20/- ISSN - 2394 - 2438

அன்பு நிறைந்த அறிவைத் தேடி ஒரு பயணம்

மலர் - 05 மே - 2017 இதழ் - 01

சிறப்பாசிரியர்
**நீதியரசர் ச. மோகன்**
(உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர்)

முதன்மை ஆசிரியர்
**நீதிபதி மூ. புகழேந்தி**

ஆசிரியர்
**முனைவர் மோ. பாட்டழகன்**
93804 17307

பொறுப்பாசிரியர்
**பேரா. திருமதி. சோதிலட்சுமி**

துணை ஆசிரியர்கள்
**அருண்குமார் ஞானவேலு**
**கவிஞர் திருவைபாபு**
**இர. மகேந்திரன்**
**கவிஞர் உமர் கத்தாபு**
**இரா. பவானி,** பி.ஏ.

சிங்கப்பூர் - பொறுப்பாசிரியர்
**எழுத்தாளர் ஏ.பி. இராமன்**

அமெரிக்கா - பொறுப்பாசிரியர்
**எழுத்தாளர் ஜெ புவனேஷ்வரி**
சான்டா கிளாரா, கலிபோர்னியா, USA

முதன்மைச் செய்தியாளர்
**புலவர் குமரகுரு**

---

வடிவமைப்பு:
**மயிலை முத்துக்கள்**
**9840924995**

## ஆலோசனைக் குழு

முனைவர் மருதூர் அரங்கராசன்
முனைவர் இனியன் கோவிந்தராஜீ, கரூர்
முனைவர் சி. கோமளவல்லி
எம். கோவிந்தன்
இரா. கௌதமராஜன்
திருமதி. பூமாவதி இராசேந்திரன்
திருமதி. விசயலட்சுமி மாசிலாமணி

இதழின் வெற்றிப் பயணத்தில் புரவலராக... வாழ்நாள் உறுப்பினராக இணைந்து ஆதரவு தாருங்கள்

| | | |
|---|---|---|
| புரவலர் கட்டணம் | : | ரூ. 10,000/- |
| வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 5,000/- |
| 5 ஆண்டுச் சந்தா | : | ரூ. 1,000/- |
| 3 ஆண்டுச் சந்தா | : | ரூ. 700/- |
| 1 ஆண்டுச் சந்தா | : | ரூ. 240/- |

**மின்னஞ்சல் மூலமும்**
**படைப்புகளை அனுப்பலாம்**
**vasantha.tha399@gmail.com**

இதழின் அனைத்துத் தொடர்புகளுக்கும்
படைப்புகள் மற்றும் கருத்துரைகளை
அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்
'வெற்றிமுனை'
**26, குறுக்குத் தெரு, ஜோசப் காலனி,**
**ஆதம்பாக்கம், சென்னை - 600 088**

93804 17307



# சங்குகளின் முழக்கம்

வழிகாட்டி இல்லாத வாழ்வு வழியற்றுப் போகும் என்று சிறப்பான அறிவுரையை வழங்கி இளைய சமுதாயத்திற்கு வழிகாட்டியாகத் திகழும் நீதியரசருக்குப் பாராட்டுகள்.

**ஆர். சோமசுந்தரம், கடலூர்.**

‘வெற்றிமுனை’ இதழைத் தொடர்ந்து படித்து வருகிறேன். பல நல்ல இலக்கியக் கட்டுரைகளை வெளியிட்டு இலக்கியம் மற்றும் ஆய்வுத்துறைக்கு தாங்கள் ஆற்றும் பணி போற்றுதலுக்குரியது. வாழ்த்துகள்.

**இரா. சண்முகசுந்தரம், மாமல்லபுரம்.**

மனிதன் வாழ்க்கையை இலக்கியமாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற இலக்கிய ஞாயிறு சிவ. சிவகுமாரின் நேர்காணலைச் சிறப்பான முறையில் பதிவு செய்து வாசகர்களுக்கு வழங்கியுள்ள திருவை பாபுவை எப்படிப் பாராட்டுவது என்றே எனக்குத் தெரியவில்லை.

**மா.சு. விசயகுமார், ஆரணி.**

இலக்கிய வரலாற்றில் தொ.மு.சி. ரகுநாதன் நடத்திய சாந்தி பாவா நடத்திய தாமரை, விஜயபாஸ்கரன் நடத்திய சரஸ்வதி போன்ற இதழ்களின் வரிசையில் ‘வெற்றிமுனை’யும் இடம் பெறும். தொடர்ந்து இதழ் வெளிவர வாழ்த்துகள்.

**கா. முத்தெழிலன், செய்யூர்.**


சு. முத்தையா எழுதியுள்ள ‘கள்ளிக்காடு இதிகாசத்தில் மருத்துவ சமூகம்’, விஸ்வபாரதியின் ‘பளியர் பழங்குடி எதிர்கொள்ளும் சமூக உளவியல் சிக்கல்கள், மு. முரளி படைத்துள்ள ‘சங்க அகப்பாட்டில் வேம்பு’ ஆகிய கட்டுரைகள் ஆய்வுத் திறத்தோடு படைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வாளர்களுக்கு நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்.

**பொ. வள்ளியப்பன், குன்றத்தூர்.**

| | | | |
|---|---|---|---|
| பெற்றோரைப் | போற்றிடுவோம் | பெருமையுடன் | வாழ்ந்திடுவாம் |
| கற்றோரை | நாடிடுவோம் | கலையெல்லாம் | மாந்திடுவோம் |
| வெற்றிமுனை | எய்திடுவோம் | விண்தொட்டுப் | பார்த்திடுவோம் |
| குற்றமில்லா | வாழ்வாலே | குவலயத்தைக் | காத்திடுவோம். |

– நீதிபதி. மூ. புகழேந்தி

# வெட்டிவேலை...



"என்ன... பையன் படிப்பு முடிஞ்சிடுச்சா?" என்ற ஒருவரின் வினாவிற்கு

"ஆங்... ஆங் ... எல்லாம் முடிஞ்சிடுச்சி.." என்ற விரக்தியான பதில் தந்தை யளித்தார்.

"என்ன வேலைவெட்டிக்குப் போறானா?" என்று இழுத்த வாறு முன்னவர் கேட்டார்.

"ஆங்..ஆங்.. போறான்.. வெட்டிவேலைக்கு..." என்றார் தந்தை வெறுப் பாக.

வேறொன்றுமில்லை, "உம்"மை நீக்கிவிட்டுப் பார்த்தால் அவை தரும் பொருளோ அபாரம்.

வெட்டிவேலை என்றால் பயனற்ற வேலை. அப்படி என்றால் – வேலை செய்வார்கள் எந்தக் குறிக்கோளும் அதற்கு இருக்காது. குறிக்கோள் மட்டுமல்ல எந்த ஊதியமும் இருக்காது.ஊதியம்என்றால்– எந்தவிதப் பயனும் இருக்காது பயனில்லாவேலை. வேலை என்றாலே அதற்குப் பயன் இருக்க வேண்டும் சாதாரணமாகச் சொல்வார்கள் "கூலிக்கேத்த வேலை" என்று. அதாவது கூலிகேற்ற வேலை என்றும் வேலைக்கேற்றகூலியென்றும் சொல்வது இயல்பு. இரண்டும் ஒரே பொருள் குறிப்பன என்றாலும் கூர்ந்து நோக்கும் போது பொருள் வேறுபடுவதை நாம் உணர முடிகின்றது. அதாவது வேலைக்கேற்ற கூலி என்னும்போது வேலை

செய்தவர் "எவ்வளவு வேலை செய்திருக்கேன்; அதைப் பார்த்துவேலைக்கேத்தக்கூலி போட்டுக் கொடுங்க" என்று வேலையை எதிர்பார்ப்பிற்கு மேல் செய்துவிட்டு அதற் கேற்ப கேட்பதுபோல் தோன்றுகிறது. வேலை வாங்கியவர்; ஒருவர் குறைந்து வேலைசெய்ததை கருத்தில் கொண்டு "வேலைக்கேத்த கூலிதான் தர முடியும்;" என்று கூறுவதாகத்தான் தோன்றுகிறது. இந்த வெட்டி வேலை ஆசாமிகள் என்று குற்றம் சாட்டப்படுகிறவர்கள் பெரும்பாலும் படித்துவிட்டு வேலை இல்லாமல் அலை பவர்கள்தான். இதில் இரண்டுவகை உண்டு. படித்துவிட்டு வேலை கிடைக்காமல் அலைபவர்கள் ஒருவகை. மற்றொன்று – படிக்காமலும் வேலைக்குப் போக விரும்பாமலும் அலையும் வகையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தந்தையைப்பொருத்தமட்டில் தண்டச்சோறு என்று பட்டம் கட்டப்படுபவர்கள். இவர்களுக்கு எது சொன் னாலும் எவர் சொன்னாலும் ஏறாது. இவர்களுக்கு சோறு மட்டும்தான் பிரதானம். இதில் வேடிக்கை என்ன வென்றால் இவர்களுக்கு முழுப் பாதுகாவலர் – அவர்களின் தாயார்தான். உழைக்காமல் ஊர் சுற்றினா லும் தாய்க்கு அவர் பிள்ளைதானே. அந்தத் தகுதியால் அவர் வாழ்ந்து கொண்டிருப்பார். இவரால் குடும்பத்திற்குப் பாரந்தான். வெட்டிவேலை என்றால் சக நண்பர்களோடு சுற்றுவது; ஒன்றுக்குமுதவாததைச் செய்வது போன்றவையாகும். இன்னொருவகையினர் வெட்டிவேலை செய்வதாகக் குற்றம்சாட்டப்படுவதும் உண்டு. அதாவது சில பெற்றோருக்கு தங்கள் பிள்ளைகள் தங்கள் வீட்டு வேலையைத் தவிர வேறு எவருக்குமோ அல்லது பொதுவாகவோ ஏதேனும் நல்ல வேலையைச் செய்வ தாலும் பிடிக்காது. அந்தப் பெற்றோர்கள் ஒருவாறு சுயநலமிக்க எண்ணமுடைய வராகவே இருப்பர். அந்தச் சூழ்நிலையில் அந்தப் பிள்ளைகள் அவர்களைப் பொருத்தமட்டில் வெட்டி வேலை செய்பவர்களே.

வேலைவெட்டி என்பது முறையாக வேலை செய்

வதைக் குறிக்கும். வேலை என்பதுடன் சேர்ந்து கொண்ட சொல் வெட்டி என்பது. இதுபோன்ற வேலைக்குக் கூலி உண்டு. இதுதான் பயனுடைய வேலை. உரிய பருவத்தில் கல்வியை முடித்துவிட்டு பணிக்குச் செல்வதையே இது குறிக்கும். பண்டை இலக்கியங்களில் தலைவி யைப் பிரிந்து பொருள் ஈட்ட ஆண்மகன் சென்று விடுவதையும் அவள் அவன் பிரிவை எண்ணி வருந்து வதையும் நாம் கண்டுள் ளோம்.


இன்றும்பாருங்கள் நம்முடைய இளைய சமு தாயம் அருமைப்பெற்றோரை யும் உற்றோரையும் பிரிந்து ஊர்கடந்தல்ல நாடுகள் கடந்து சென்று பொருள் ஈட்டுவதைக்காண்கின்றோம். இன்னும் சில இளைஞர்கள் அன்பு மனைவிமக்களையும் பிரிந்து சென்று பொரு ளீட்டுவதையும் நாம் பார்க்கின்றோம். இதுதான் வேலை. இதுதான் ஆடவ னின் பொறுப்பு. இப்படிப் பட்ட வேலை செய்பவர் களுக்குத்தான் பெண் வீட்டார் மண முடிக்க பெண் கொடுக்க ஒப்புவார்கள். ஆனால் வெட்டிவேலை ஆசாமிகள் உரிய திருமண பருவம் அடைந்தபோதும் அவர்கள் தந்தையர் அவருக்கு திருமணம் செய்து வைக்க உள்ளம் கொள்ளார். எந்தப் பெண் வீட்டா ராயினும் “பையன் என்ன வேலை செய்கிறார்? எவ்வளவு சம்பாதிக்கிறார்?” என்பதைத்தான் முதலில் கேட்பார். அந்தச் சூழ்நிலை யில் அந்த ஆசாமிகளின் பெற்றோர் பதில் சொல்லக் கூனி குறுகுவர். எந்தப் பெண்ணுடைய பெற்றோரும் தம் மகளை வெட்டிவேலை ஆசாமிக்குக் கொடுக்க சம்மதிக்க மாட்டார்கள். அதனால் வேலை விஷயத்தில் நாம் பொறுப்போடு நடந்து கொள்ளவேண்டும்.

“ஓடிஓடி உழைக்கணும்....”

என்ற பாடல்வரி எவ்வளவு பொருள் பொதிந்தது என்பதை நாம் உணர வேண்டும். அது உண்மை யானது என்றும் நாம் உணர வேண்டும்.

மக்கள் நலம் நாடும்,

நீதிபதி மூ.புகழேந்தி

# தமிழ்வாணன் பார்வையில் பெரியார்


தொகுத்து எழுதியவர்
கவிஞர் உமர்கத்தாபு


**வினா: இந்த நாட்டில் பெரியார் தோன்றியிராவிட்டால், அதனால் ஏதாவது மாற்றங்கள் நிகழ்ந் திருக்குமா?**

*விடை: பெரியார் தோன்றியிரா விட்டால் சரித்திரத்தில் பல தோல்விகளைத் தமிழன் சந்தித்திருப்பான். இப்போது தலைநிமிர்ந்திருக்கும் தமிழர்கள் இந்த அளவுக்குத் தலை நிமிர முடியாது. தமிழன், முதுகில் ஓர் இனமே ஏறிக் குந்தி விளையாட நேரிட்டிருக்கும்!*

**வினா: பெரியாருக்குத் துணிச்சல் இளமையிலேயே அமைந் திருந்ததா? அல்லது பிற்காலத்தில் வந்து சேர்ந்ததா?**

*விடை: பிறவியிலேயே அவர் துணிச்சல்காரர்தான். அந்த இராமநாத அய்யர் 'எல்லாம் கடவுள் செயல்' என்று வாதிடக்கூடியவர். அய்யர் கடை வாசலின் முன் தட்டி கால் கொடுத்துத் தூக்கி வைக்கப்பட்டிருந்தது. பெரியார் தமது காலால் ஓர் உதை உதைத்துத் தட்டியைத் தள்ளிவிட்டார்! அய்யர் அலறினார்! "என்னை ஏன் ஏசுகிறாய்? தலைவிதி உன் தலையில் தட்டியைத் தள்ளிவிட்டது!" என்று*

*துணிச்சலாகச் சொன்ன வராயிற்றே பெரியார்.*

**வினா: பெரியார் நீடித்த வாழ்வு வாழ்வதன் இரகசியம் என்ன?**

*விடை: அவரது நெஞ்சில் அச்சம் இல்லை. கவலை இல்லை. இரகசியங்கள் இல்லை! அறிவில் பெரியாராகிவிட்ட போதும், அன்பில் சிறு குழந்தையாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்! மனிதன், தன்னைப் பற்றியே நினைக்கும்போது தளருகிறான். இதற்குப் பெரியாரின் வாழ்வும் ஒரு சான்றாகும்.*

**வினா: பெரியார் நடத்திய இல்வாழ்வு எப்படி அமைந்திருந்தது?**

*விடை: மனைவி நாகம்மாள் கையால் பரிமாறிச் சாப்பிட்டால் தான் அவருக்குச் சாப்பிட்டது போலிருக்கும்! என்ன தூக்க மென்றாலும் எழுப்பி விடுவார். ஒருமுறை தூக்கத்தில், பரிமாறிய அந்த அம்மையார் எண்ணெய்க் குடத்திலிருந்து ஒரு குவளை எண்ணெயையும், பக்கத்திலிருந்த அரப்புத் தூளையும் அள்ளி இலையில் வைத்து விட்டார். சினம் கொள்ளவில்லை பெரியார் சிரித்துக் கொண்டார்! இதைவிட இல்லற வாழ்க்கையின் சிறப்புக்குச் சான்று வேறு என்ன வேண்டும்?*

**வினா: பெரியார் துறவிக்கோலம் பூண்டு வடநாடு கிளம்பினாரே, அந்த வாழ்வை ஒழுங்காக நடத்தினாரா?**

*விடை: இல்லை. உடைதான் மாறியதே தவிர உள்ளம் மாறவில்லை. கோபம்தான் மாறியதே தவிர, கொள்கையும் குறும்புத்தனமும் மாற வில்லை! இவரோடு சேர்ந்த இரண்டு பகைவர்கள் கதாகாலட் சேபத்தை முறையோடு நடத்தியபொழுது இவர் விளக்கம் தருவதுபோல, அவற்றில் ஆபாசங்களைக் குறும்புத்தனமாக எடுத்துக் காட்டினார்! எந்த நிலையிலும், அவருக்குத் துறவுத் தன்மையில் நம்பிக்கை வந்ததே இல்லை.*

**வினா: பெரியாரை, நீங்கள் மனதாரப் பெரியார் என்று ஏற்றுக்கொண்டது எப்போது?**

*விடை: இப்போதுள்ள நம் தலைவர்களில் பலருக்குத் தங்கள் சுகத்திலிருந்துதான் கொள்கைகள் தொடங்கு கின்றன! பெரியார் முன்னொரு காலத்தில் என்ன செய்தார் தெரியுமா? ஈரோட்டிலே பயங்கர பிளேக் நோய் பரவி மக்களைக் கொன்று குவித்தபோது, ஊரைவிட்டு ஓடவில்லை! கொஞ்சமும் அஞ்சாமல், தம் தோளில் பிணங்களைத் தூக்கிச் சென்றிருக்கிறார்! தனக்கும் அந்த நோய் தொத்திவிடுமே என்ற கவலையே அவரிடம் எழவில்லை! அதிலிருந்துதான், இவர் சாதாரண ஈ.வெ.ரா. அல்ல, பெரியார் என்ற முடிவை மேற்கொண்டேன்.*

**வினா: இராமலிங்க வள்ளலாரையும் நாடு 'ஐயா' என்று அழைக்கிறது. ஈ.வெ.ரா. பெரியாரையும் நாடு 'ஐயா' என்று அழைக்கிறது. இது சரியா?**

*விடை: இருவரையும் அப்படித் தான் அழைக்க வேண்டும். சமூகம் திருந்த வேண்டும் என்று தணியாத ஆவல் கொண்டவர்கள் தான் இருவரும். புரட்சிக் கருத்துக்களை வாரி வாரி வழங்கியவர்கள்தாம் இருவரும். தமிழ்நாடு தகுதியோடுதான் அப்படி அழைத்து வருகிறது.*

**வினா: தமிழ்நாட்டில் எவ்வளவோ தலைவர்கள் இருக்கும்போது, இவரை மட்டும் 'தமிழர் தந்தை' என்று அழைப்பது ஏன்?**

*விடை: மற்றத் தலைவர்கள் எல்லாரும், தமிழர்களின் 'மாமா'வாகவும், தமிழர்களின் 'அத்திம்பேர்' ஆகவும்தான் இருக்கிறார்கள்! பெரியார் மட்டும்தான் 'தந்தை' என்று சொல்லத்தக்கவராக இருந்து வருகிறார்! யாரை வேண்டுமானாலும் தந்தை என்று சொல்லிவிட முடியுமா?*

**வினா: காங்கிரசில், பெரியார் நீடித்து இருந்தால் என்ன நிலைக்கு வந்திருப்பார்?**

*விடை: இந்தியக் குடியரசுத் தலைவராகும் வாய்ப்பும் இவரைத் தேடி வந்திருக்கும்! இப்பொழுதும்தான் என்ன, பதவியில் உட்காராத ஜனாதிபதியாகத்தானே இருந்து வருகிறார்!*

**வினா: பெரியார் மறந்தும் செய்யாத தவறு என்ன?**

*விடை: மறதியாகக்கூட அவர் பொய் சொன்னதில்லை! 'நான் யாருக்கு அஞ்ச வேண்டும், ஏன் மறைத்துப் பேசவேண்டும்' என்ற தன்மான உணர்வுகள் அவர் வாயிலிருந்து பொய்களை வரவிடுவதில்லை. காந்தி, நேருவின் பேச்சை எப்படி ஐயமின்றி நம்பலாமோ அப்படியே பெரியார் சொல்வதையும் நம்பலாம். பெரியாரின் இதயத்துக்குள் இரகசிய அறைகள் கிடையவே கிடையாது!*

**வினா: பெரியாரின் குடும்பத்துக்கு அன்று எவ்வளவு சொத்து இருந்திருக்கும்?**

*விடை: அந்தக் காலத்தில் திருவிதாங்கூர் மன்னர் டில்லிக்குப்போகும் நேரங்களில் ஈரோடு ஸ்டேஷனில்தான் இறங்கிக் குளித்துச் சாப்பிட்டு விட்டு, ரயிலில் புறப்படுவார். அப்படி அவர் இறங்கிய போதெல்லாம், ஈ.வெ.ரா.வின் ரயில்வே பங்களாவிலும், அவரது பரிவாரங்கள் ஈ.வெ.ரா.வின் சத்திரத்திலும்தான் தங்கி உணவு உண்டு செல்வது வழக்கம். அதிலிருந்தே பார்த்துக் கொள்ளுங்களேன், ஈ.வெ.ரா.வின் குடும்பச் செல்வநிலையை. பெரியார்,*

*அரசியலுக்கு வரவேண்டிய தேவையே இல்லாதவர். வாணிபத்திலேயே இருந்திருந்தால் இன்று தென்னாட்டு டாட்டா, பிர்லா ஆகியிருப்பார்!*

**வினா: பெரியாருக்கு அன்று தீவிரமான வெறுப்பு எதில் எதில் இருந்தது?**

*விடை: இரண்டு வகையான நூல்களில்தான்! ஆபாசம் நிறைந்த பழைய நூல்கள் அவருக்குப் பிடிக்கவில்லை. அந்தணன் என்போர் தம்மை உயர்ந்தோர் என்று கூறித் தோளில் போட்டிருந்த நூலும் பிடிக்கவில்லை!*

**வினா: காந்தியடிகளிடம் பெரியார் வைத்திருந்த நம்பிக்கை எவ்வளவு நாள்கள் வரை நீடித்து இருந்தது?**

*விடை: 1926ம் ஆண்டு வரையில் பெரியாரைப் போல் காந்தியத்தை ஆதரித்தவர்களுமில்லை. பிற்பாடு, அவரைப் போல் வெறுத்தவர்களுமில்லை! 1927ல் காந்தியடிகள் மைசூரில் ஒரு கூட்டத்தில் வருணாசிரமத்தை ஆதரித்துப் பேசி விட்டதாகப் பெரியார் செய்தி அறிந்து, அதுமுதல் அவரைத் தாக்கத் தொடங்கி விட்டார்! மகாத்மாவைவிட, மனச்சான்றே பெரிது என்று அவர் துணிந்து விட்டார்.*

**வினா: பெரியாரைப்பற்றி, எவ்வளவோ பேர், எப்படி எப்படியோ கருத்து உரைத்திருக்கிறார்கள். இவற்றில் யார் கூறியது தங்களை மிகவும் கவர்ந்தது?**

*விடை: ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் சொன்னது. அவர் சொன்னார்: "ஓர் உண்மையான பெரியாருக்கு வேண்டிய குணங்கள் மூன்று. ஒன்று, அவரைப்பற்றி உலகத்தார் தப்புக் கருத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக அவர் கொள்கைகள் எங்கேயும் கண்டிக்கப்பட வேண்டும். மூன்றாவதாக அவர் எங்கேயும் கடுமையாக சபிக்கப்பட வேண்டும்." இதுதான் ரசிகமணி பெரியாரைப் பற்றி நன்கு ரசித்துச் சொன்னது! அந்த மூன்று சிறப்பும் பெரியார் வாழ்வில் அப்படியே அமைந்திருக்கின்றன.*

**வினா: பெரியார், தமிழர்களுக்கு முதலில் ஊட்டிய அரசியல் உணர்ச்சி எது?**

*விடை: 'எறும்புப் புற்று, எறும்புகளுக்கே. எலியின் வலை எலிகளுக்கே' என்று சொல்ல வேண்டிய தேவையில்லை. அவை தங்கள் சொந்த நிலத்தை நன்றாகவே கவனித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த உணர்வு கூடத் தமிழர்களிடமில்லை என்பதைக் கண்டார், பெரியார். உடனே, 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற வீரக்குரலை எழுப்பி*

*தமிழனுக்கு முதன் முதல் அரசியல் பாடத்தைச் சொல்லிக் கொடுத்தார்.*

**வினா: பெரியாரின் வாழ்வில் காணப்படும் சரித்திரச் சிறப்பு எது?**

*விடை: முன்பு மூவேந்தர்கள் வாழ்ந்தார்கள். மற்றும் பாளையக்காரர்கள் வாழ்ந்தார் கள். ஆனால், அவர்களில் யாரும் முழுத் தமிழ்நாடும் புகழும் வண்ணம் வாழ்ந்ததில்லை. எல்லாத் தமிழர்களும் ஒரே ஒரு மனிதரின் வாய்ச் சொல்லை எதிர்பார்த்து, தங்கள் வாழ்வை நடத்தியதில்லை! இந்த வகையில் சரித்திரத்தில் பெரியாரின் புகழ் 'கான்கிரீட்'டில் எழுதியது போலாகிவிட்டது.*

**வினா: பெரியாரைப் போல, வாதமிடும் திறன் பெற்ற மேனாட்டு அறிஞர் யார்?**

*விடை: கிரீசு தேசத்துத் தத்துவஞானி சாக்ரடிசுதான், இவரைப்போலவே எதிராளியின் சொற்களைக் கொண்டே எதிராளிகளை மடக்கியிருக்கிறார்! ஒருமுறை ராஜாஜியே பெரியாரை நோக்கி நல்லவேளையாக சட்டப் படிப்பு படித்து வழக்கறிஞராக வராமல் போனீர்கள்! நீங்கள் வழக்கறிஞராக வந்திருந்தால், பிறகு நாட்டில் உள்ள வழக்கறிஞர்கள் பாடு மிகவும் திண்டாட்டமாகப் போயிருக்கும் என்று சொல்லி இருக்கிறாரே!*

**வினா: தமிழ்மொழி பற்றிப் பெரியார் கருதுவது என்ன?**

*விடை: தமிழர்களின் வாழ்வைத் தமிழ் மேம்படச் செய்கிறது. அதனால் தமிழ் வாழ்க என்பதாகச் சொல்கிறார். அதாவது தமிழுக்காகத் தமிழர்களில்லை. தமிழருக்காகத்தான் தமிழ்மொழி என்கிறார், அவர்!*

**வினா: எந்த விதத்தில் தி.மு.க.வுடன் பெரியார் கருத்தை வேற்றுமை கொள்கிறார்?**

*விடை: இயக்கத்தைவிட ஒழுக்கம் முக்கியம் என்கிறார், அவர். அவர்கள், ஒழுக்கத்தைவிட, இயக்கமே முக்கியம் என்று நினைக்கிறார்கள். இதுதான் பெரியாருக்கும் அவர்களுக்குமிடையே இத்தனை ஆண்டுகளாக நடந்து வரும் சண்டையின் பொழிப்புரை!*

**வினா: தாழ்த்தப்பட்டவர்களுக் காகப் பெரியார் செய்தது என்ன?**

*விடை: பெரியாரின் வாழ்வின் சாரமே அதுதான். திராவிடர் என்ற பெயரால் தாழ்த்தப் பட்ட அனைவரையும் ஒன்றாகத் திரட்டி, உணர்ச்சி ஊட்டிக் கொண்டேயிருந்தார். தாழ்த்தப்பட்டவர்கள் அந்தக் காலத்தில் ஒருநாள் விசிட்டராக வந்து பார்க்கக்கூட முடியாத இடங்களில், இன்று நாற்காலியில் உட்கார்ந்து வேலை பார்த்து*

*வருகிறார்கள் என்றால், யாவும் பெரியாரின் பெருமுயற்சி என்று தான் சொல்ல வேண்டும். தாழ்த்தப்பட்ட தோழருக்கு எட்டாத உயரத்தில் இருந்த வாழ்வைப் பெரியார்தான் தொட்டு எடுத்துக்கொள்ள உதவி புரிந்தார்.*

**வினா: பெரியார் கம்யூனிசத்தை விரும்புகிறாரா?**

*விடை: அவரிடம் இதயம் சேராத அறிவு மட்டும் இருந்திருந்தால், இப்போது ஒரு பெரிய இந்திய கம்யூனிஸ்டுத் தலைவராகத்தான் இருந்திருப்பார்! இதயமும் இருப்பதால் தான் தமிழனுக்கேற்ற தனி இயக்கமே துவக்கினார் அவர். மன்னார்குடித் தமிழனுக்கு, மாஸ்கோவில் தயாரான ரொட்டி வயிற்றுக்கு ஆகாது என்பதை சரிவர உணர்ந்திருக்கும் தெளிவான அரசியல்வாதி அவர்.*

**வினா: சமூகத்தைப் பற்றி பெரியாரின் முடிவு என்ன?**

*விடை: சட்டமன்றம், பத்திரிகை, பார்ப்பனர், தேர்தல், சினிமா ஆகிய இந்த ஐந்தும் நாட்டைப் பிடித்துள்ள ஐந்து வகை நோய்களாகும் என்று சொல்லியிருக்கிறார், அவர்.*

**வினா: பெரியார் மணியம்மையை மணந்திராவிட்டால், நிலைமைகள் என்ன ஆகியிருக்கும்?**

*விடை: பிரிந்து வந்தவர்கள், உள்ளேயிருந்து அவரைக் குழப்பியிருப்பார்கள். பெரியாருக்குத் தக்க துணை கிடைக்காமல் போயிருக்கும். தி.மு.க. தோன்றியிராது. தி.க. துவண்டிராது. மழைக் காலத்துக் காளான்கள் போல் நிறையத் திடீர்த் தலைவர்கள் முளைத்திருக்க மாட்டார்கள்! அரசியல் இவ்வளவு 'சீப்' ஆகியிருக்காது!*

**வினா: பெரியார் இந்த நாட்டு மக்களுக்கு முக்கியமாகச் சொல்லிக் கொடுத்தது என்ன?**

*விடை: இரண்டே இரண்டுதான். ஏன்? எதற்கு? என்பவைகள் தாம் அவை. எதையும் ஏன், எதற்கு என்று கேட்டுக் கொண்டேயிருங்கள். பகுத்தறிவு வளர்ந்து கொண்டேயிருக்கும் என்றார்.*

**வினா: மணியம்மையார் பற்றித் தாங்கள் கூற விரும்புவது என்ன?**

*விடை: பெரியாருக்கு பணிவிடை புரிவதையே தன் பேறு என்று கருதி வாழும் மணியம்மை என்று கூறுவதைவிட, 'பணி'யம்மை என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும். அந்த அம்மையார் 'மணிக்'காகவா திருமணம் புரிந்து கொண்டார்கள்? 'பணிக்'காகத் தன்னை அர்ப்பணித்த திருமணம்தானே அது!*

**வினா: பெரியார் காமராசரிடம் அப்படி என்ன சிறப்பைக் கண்டார்?**

*விடை: அதிகம் பேசாமல், அதிகம் செயலாற்றும் தன்மைதான் பெரியாரை மிகவும் கவர்ந்திருக்க வேண்டும். காமராசர், தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும், ஏழைகளுக்காகவும் நிறையப் பாடுபடுகிறாரே, இதுவும் பெரியாரைக் கவர்ந்திருக்க வேண்டும். ஒரே ஒரு கோவிலைக்கூட கட்டாமல், ஆயிரக்கணக்கில் ஊரெங்கும் பள்ளிகளைத் திறந்துவிட்டாரே, இவ்வாறு காமராசர் பள்ளிகளைத் திறந்த பிறகுதான், பெரியார் தமது மனதைத் திறந்து அவரைப் பாராட்டத் தொடங்கினார்.*

**வினா: பெரியார், எங்குமே, காலம் தவறாமல் வந்து விடுவாராமே!**

*விடை: அவர் வாழ்வில், நான் இதை மட்டுமே ரசிக்க வில்லை. தமிழ்நாட்டில் அவர் தோன்றியிருப்பது கூடக் குறிப்பிட்ட காலத்தில்தான். இந்த இருபதாம் நூற்றாண்டில் அவர் தோன்றாமல், இன்னும் இரண்டு மூன்று நூற்றாண்டு கழித்து தோன்றுவதாயிருந்தால், நாடே அதற்குள் மூடக் கொள்கைகளினால் மூழ்கடிக்கப் பட்டிருக்கும்!*

**வினா: திருக்குறள் மக்களிடையே அதிகம் பேசப்பட்டதற்குப் பெரியார் ஒரு காரணமா?**

*விடை: நிச்சயமாகக் கூறலாம். பெரியார் எல்லா நூல்களையும் தாக்கி வந்தார். எந்த நூலை ஊன்றிப் படிப்பது என்று மக்களுக்குத் தெரியாதிருந்தது. அப்போது, பெரியார் 'திருக்குறள்தான் பகுத்தறிவுக்குப் பொருந்தும் நூல். வள்ளுவரை மட்டும்தான் நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்றார். அதற்கு முன் அதிகம் விற்பனையாகாத குறள் நூல்கள், பெரியாரின் பாராட்டுக்குப் பிறகு பல ஆயிரக்கணக்கில் விற்பனையாகத் தொடங்கின.*

**வினா: அண்ணாவைப் போல், பெரியார் கலைஞர்களைத் தம் அருகில் வைத்துக் கொள்வதே இல்லையே ஏன்?**

*விடை: பெரியார் சாமான்ய ஆளா என்ன! கலைஞர்களைப் பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும்! கலைஞர்களுக்குக் கலைக்கிற, கலைத்து விடுகிற புத்தி உண்டு என்பது அவருக்கு முன்னமே தெரியும்! அதனால் கலைஞர்களை அருகில் நெருங்க விடுவதில்லை அவர்!*

பதிப்பு : 1965 நூல் :
பெரியார் ஈ.வெ.ரா.
ஆசிரியர் : தமிழ்வாணன்


***'வெற்றிமுனை' இதழ் தொடர்ந்து உங்கள் இல்லம் தேடி வர இதழுக்கு உறுப்பினராகிச் சந்தாவைச் செலுத்துங்கள்***



# 3 வயதிலிருந்து குழந்தைகளுக்கு கதை நூல்களை அறிமுகப்படுத்த வேண்டும்

பள்ளிக்கல்வித்துறை சார்பில் உலக புத்தக தினவிழா சென்னை மாவட்டத்தில் உள்ள அரசு நூலகங்களில் 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. சென்னை அண்ணாசாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகத்தில் நடைபெற்ற விழாவுக்கு பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் எஸ்.கண்ணப்பன் தலைமை வகித்தார்.

உலக நூலக தினவிழா தொடர்பாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு எழுத்தாளர் சா.கந்தசாமி பரிசுகளை வழங்கிப் பேசியது:

உலகின் மாபெரும் எழுத்தாளர்கள் பலரின் பிறந்தநாள், நினைவுநாள் ஆகியவை ஏப்ரல் 23ஆம் தேதி வருகிறது. இதை நினைவூட்டும் வகையில் உலக புத்தக தினம் கொண்டாடப்படுகிறது. தமிழுக்கு இலக்கியப்

பொக்கிஷங்களை வழங்கிய உ.வே.சாமிநாத அய்யரின் நினைவு நாளும் ஏப்.23இல் அனுசரிக்கப்படுகிறது.

அச்சுக்கலையை அறிமுகப் படுத்திய தமிழ்: தென்கிழக்கு ஆசிய நாடுகளில் முதன் முதலாக தமிழில்தான் நூல் அச்சிடப் பட்டது. 1578ஆம் ஆண்டு பாதிரியார் ஹென்ஹிக்ஸ் எழுதிய "தம்பிரான் வணக்கம்' என்ற நூல்தான் தமிழில் அச்சில் வெளிவந்த முதல் நூல். இது போர்த்துக்கீசிய மொழியில் எழுதப்பட்ட கிறிஸ்தவ சமய போதனை நூலின் தமிழாக்கம்.

ஐரோப்பிய நாடுகளில் பெற்றோர் தங்களது குழந்தை களுக்கு 3 வயது முதல் கதை, சரித்திரம் தொடர்பான நூல்களை அறிமுகப்படுத்து கின்றனர். அதனால் அந்தக் குழந்தைகளுக்கு பள்ளிப் பருவத்திலேயே எந்தெந்த நூல்களைத் தேர்வு செய்து படிக்க வேண்டும் என்ற புரிதல் ஏற்படுகிறது. இதை அந்த நாடுகளில் குடியேறிய இந்தியப் பெற்றோரும் கடைப்பிடிக்கின்றனர். இளம் வயதிலேயே குழந்தை களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த நமது நாட்டில் உள்ள பெற்றோர் இதைப் பின்பற்றவேண்டும்.

**குழந்தைகளுக்கான நூல்களை வெளியிட...:**


தற்போது வெளியிடப் படும் குழந்தைகளுக்கான பெரும் பாலான நூல்கள் வெள்ளைத் தாள்களில் நிரப்பப்பட்ட கருப்பு எழுத்து களாகத்தான் உள்ளன. "சில்ரன்ஸ் புக் சொசைட்டி' உள்பட சில நிறுவனங்கள் மட்டுமே குழந்தைகளுக்கான நல்ல புத்தகங்களை வெளியிடு கின்றன.

அழகான படங்கள், நவீன வடிவமைப்புடன் நல்ல விஷயங் களைப் போதிக்கும் வகையில் குழந்தைகளுக்கான சிறந்த நூல்களை வெளியிட தனியார் நிறுவனங்கள், அமைப்புகள் முன்வர வேண்டும்.

தமிழக நூலகங்களுக்குப் பெண்கள் தங்களது குழந்தை களுடன் வருவதற்கு ஊக்குவிக்க வேண்டும் என்றார் அவர்.

எழுத்தாளர் நந்தலாலா, சென்னை மாவட்ட மைய நூலக அலுவலர் இளங்கோவன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

# வெள்ளத்தாண்டவம் ஓர் பார்வை



நீதிபதி மூ. புகழேந்தி

முனைவர் சேதுகுமணன் அவர்களைத் தலைவராகக் கொண்ட சென்னை 99, சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, தமிழ்த் துறையில் பேராசிரியர் பணியாற்றி வரும் முனைவர் அரு. அபிராமி அருணாசலம் அவர்கள் சிவகங்கை மாவட்டம் - காரைக்குடியைச் சார்ந்த வீர.அருணாசலம் - வள்ளியம்மை தம்பதியரின் மகளாவார். இவர் ஆரம்பக் கல்வியை காரைக்குடி அழகப்பா ஆயத்தப் பள்ளியிலும் உயர்நிலைகல்வியை காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் இளங்கலைத் தமிழை - காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியிலும் முதுகலைத்தமிழ் மற்றும் ஆய்வியல் நிறைஞர் ஆகியவற்றை சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறையிலும் பயின்று வெற்றி பெற்றுள்ளார். நகரத்தாரின் வாழ்வியலும் மொழிக்கூறும் என்ற ஆய்வுத்தலைப்பில் இராணி மேரி கல்லூரி நெறியாளர் - முனைவர். இரா. அனுராதா அவர்களின் துணையுடன் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். இவர் கல்லூரியில் ஆரம்பித்து இன்றுவரை பலமேடைகளில் சொற்பொழிவாற்றியும் கவிதைகள் எழுதியும் பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பங்கேற்றும் வருகின்றார். ஆழ்ந்த இலக்கியப் புலமையுடைய இவர் எடுத்துக் கொண்ட எந்தவொரு பொருளையும் அலசி ஆராய்ந்து காலக்கண்ணோட்டதையும் குறிப்பிட்டு ஆதாரத்துடன் சொல்லும் வல்லமையுள்ளவர். இவர் சோழர் காலம் காப்பியக் காலம் என்றும் தற்போதைய 21-ஆம் நூற்றாண்டில் நீதிபதி மூ. புகழேந்தி எழுதிய வெள்ளத்தாண்டவம் வரலாற்று மகா காவியம் ஒரு காப்பியம் என்றும் கட்டியம் கூறுகின்றார். அவர் வெள்ளத்தாண்டவம் ஓர் பார்வை என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை 12 - 2 - 2001 அன்று சென்னை வேளச்சேரி யிலுள்ள ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த பான்னாட்டுக் கருத்தரங்கில் வெளியிட்ட காலந்தோறும் தமிழ் என்ற கட்டுரைக் கோவையில் முதல் கட்டுரையாக இடம்பெற்று பெருமை பெற்றுள்ளது. இதோ அக்கட்டுரை:




**பேராசிரியர் முனைவர்**
**அரு. அபிராமி,**
உதவிப் பேராசிரியர்,
சோகா இகதா கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி,
சென்னை - 99.

## வெள்ளத்தாண்டவம் ஓர் பார்வை

*தமிழ் மொழி நாளும் தன்னை அன்றாட சுழலுக்கு ஏற்ற வகையில் தன்னைப் புதுக்கிக் கொள்கின்ற வல்லமை பெற்ற மொழி. தமிழ் மொழியின் இலக்கிய வரலாற்றில் சோழர் காலமே காப்பியக்காலம் ஆகும். காப்பியத்திற்கான இயல்புகளைப் பெற்று 21ஆம் நூற்றாண்டில் 'வெள்ளத்தாண்டவம்' என்னும் நூல் நீதிபதி மூ. புகழேந்தி அவர்களால் எழுதப்பட்டுள்ளத. அக்காப்பியத்தை முன்னிறுத்தியே இக்கட்டுரை எழுதப் பட்டுள்ளது.*

### நூல் அமைப்பு

*வெள்ளத்தாண்டவம் என்னும் இந்நூல் 254 பக்கமும் பின்னிணைப்பாக 46 பக்கமும் மொத்தம் 300 பக்கங்களைக் கொண்டுள்ளது. இந்நூல் 644 ஆசிரிய விருத்தங்களைக் கொண்டு இலங்கிறது. நான்கு பாகங்களைக் கொண்டுள்ளது. முதல் பாகத்தில் 7 இயல்களையும் இரண்டாம் பாகத்தில் 36 இயல்களையும் மூன்றாம் பாகத்தில் 5 இயல்களையும் நான்காம் பாகத்தில் 18 இயல்களையும் மொத்தம் 56 இயல்களைக் கொண்டு நூல் கட்டமைக்கப்பட்டுள்ளது. நூலின் பின்னிணைப்பில் காப்பியத்திற்கு அகச் சான்றாக அமையும் புகைப்படங்கள் நாளிதழின் பெயர், வெளியான தேதி, மாதம், வருடம் ஆகிய வற்றுடன் படிப்பவரே வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கும் பாங்கு நூலாசிரியருக்குச் செய்தித் திரட்டுவதிலும் அதை ஆவணப்படுத்துவதிலுள்ள ஆர்வத்தை வெளிக்காட்டு கிறது.*

### நாட்டுவளம்

தமிழகத்தின் மேன்மை சிறப்பாக எடுத்துரைக்கப்படுகிறது.

கன்னல்நல் தமிழ்நாடு! கல்வியோடு
கலையெல்லாம் சிறந்தொங்கும்
கவிதை ஏடு

பாடல் எண். 8

### நகர் வளம்

*காப்பியத்தின் அமைப்பைப் பின்பற்றிச் சென்னை நகரின் வளம் சுட்டப்படுகிறது.*

மின்தொடர்வண் டியுண்டு
நின்றுபார்த்தால்
விண் வழியில் பயணிப்போம்
என்போர்க்கெல்லாம்
வானூர்த்தி நிலையந்தான் இங்கே
உண்டு

பாடல் எண். 33

### நகரத்தின் வேறு பெயர்கள்

*நகரின் மாண்பை விளக்க நகரின் வேறு பெயர்கள் சுட்டப்படுதல் மரபு. அம்மரபு முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளது.*

மதராசப்பட்டினம் சென்னைப் பட்டணம்
மெட்ராஸ்
சென்னை

பாடல் எண். 22

*சென்னை என்று பெயர் வந்த வரலாற்றை இப்பாடல் விளக்குகிறது.*

நகரத்தின் ஆறு பருவங்கள்
ஆண்டுதோறும் வரும் ஜூன் மாதத்து
இன்னலை நூலாசிரியர் நன்றாக
எடுத்தியம்புகிறார்.

முதுவேனிலதுதான் முடிக்கிவிடுமாம்
பெற்றோர் தம்மை
பிள்ளைகள் சேர்க்கை என்னும் படலம்

பாடல் எண். 35

*வர்தா புயலில் நாம்பட்டப் பாட்டை இவ்வரி நினைவு கூறுகிறது.*

புயல் மையங்கொண்டு பீதி கிளப்பிடும்

பாடல் எண். 37

*மார்கழி மாதத்தில் நடைபெறும் மார்கழி திருவிழா பற்றிய செய்தி நம்மை மகிழ்விக்கிறது.*

இசை விழா நடத்தி இன்பம் கூட்டுவர்

பாடல் எண். 37

### *காப்பியக்கதை மாந்தர்கள்*

| | | |
|---|---|---|
| அரங்கநாதன், பவளத்தம்மாள் | – | தலைவியின் பெற்றோர் |
| செங்குழலி | – | தலைவியின் சகோதரி |
| சுந்தரன் சகோதரன் | – | தலைவியின் |
| கோதை | – | காப்பியத்தலைவி |
| ஆனந்தி | – | தலைவனின் தாய் |
| வேல்குமரன் | – | காப்பியத்தலைவன் |

### மையக்கரு

*2015 ஆம் ஆண்டு டிசம்பரில் நடந்த பெருமழைக் கால வெள்ளம் வேல்குமரன் கோதை இருவருக்கிடையேயான காதல் பெருமழைக் கால வெள்ளத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளைப்பதிவு செய்ய வேல்குமரன் கோதையின் காதல் ஊடுகருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

### வேல்குமரனின் ஆசை மொழி

*வேல்குமரன் கூறும் ஆசை மொழியைப் படிக்கின்ற போது சிலம்பில் கோவலன் கூறும் உலவாக் கட்டுரையை நினைவுப்படுத்துகிறது.*

கண்ணே! கோதையே!
பெண்ணிடையாள் தொட்டக்கைத்
தொட்டான்

பாடல் எண். 215

### கூவம்

*கூவம் பிறந்த கதையை வாசிக்கக் கண்களிலே கண்ணீர் பனிக்கின்றது. உலகில் வாழ்ந்து கெட்டாரை நாடறியும் அதுபோலவே கூவமும் பிறக்கையில் நன்னீர். பின்னரே உருமாறி, திசைமாறி, நிறம் மாறி போனது.*

தீதில்லா திருமகளாய் வந்ததைத்தான்
தீவினைக்கு ஆளாக்கி விட்ட நாம்தான்

பாடல் எண். 392.

### உவமைச்சிறப்பு

*காப்பியத்திற்குச் சிறப்பு சேர்க்கப் பல நிலைகள் இருந்தாலும் உவமை நலம் அமைய பாத் தொடுத்தல் என்பது சிறப்பு. அச்செயலை நூலாசிரியர் திறம்பட செய்துள்ளார். நூல் முழுமையிலும் 100க்கும் மேற்பட்ட உவமைகளைக் கையாண்டுள்ளார். அவற்றுள் சில பின்வருமாறு*

புலி கண்ட மான்கள் போல மருண்டு நின்றார்

பாடல் எண். 115

அப்பத்திற்கேங்குகின்ற பூனைப்போன்

பாடல் எண். 81

கும்மிருட்டுப்போல வானம்

பாடல் எண். 119

கஜினிபடை எடுப்பைப்போல

பாடல் எண். 315

மடை திறந்தாற் போல் வெள்ளம்

பாடல் எண். 393

### வேற்றுமொழிச் சொற்கள்

*பிறமொழிக்கலப்பு என்பது நூலில் காண முடிகிறது. நூலாசிரியர் வேற்றுமொழிச் சொற்களைக் கூட யாப்பமைதிக்குள் நிலை நிறுத்தியிருப்பது ஆசிரியரின் இலக்கணப் புலமைக்குச் சான்றாகிறது. பயன்படுத்தியுள்ளவற்றிலிருந்து சில சொற்கள்*

| | |
|---|---|
| மால் | பாடல் எண். 23 |
| டைல்ஸ் | பாடல் எண். 28 |
| மோட்டார் சைக்கிள் | பாடல் எண். 32 |
| மியாட் | பாடல் எண். 36 |
| லப்-டப் | பாடல் எண். 312 |
| டோபிகானா | பாடல் எண். 194 |

### சோதிடக் குறிப்பு

*நூலின் காலத்தை ஆசிரியரின் காலத்தைக் கணிப்பதற்கு இதுபோன்ற சோதிடக் குறிப்புகள் பயன்படும்.*

நல்லதோர் நாள்தான் பார்த்தார்
வளர்பிறையன்று அந்த
நல்ல நாள் பஞ்சமியோடு
அமிர்த யோகம் தன்னில்

### முடிவுரை

*பெருமழைக் காலத்தில் வேல்குமரன் கோதையின் குடும்பத்தில் சம்பவங்களின் அடிப்படையில் காப்பியம் நகர்ந்து. இருவரும் எவ்வாறு ஒன்று இணைந்தனர் என்று காப்பியம் நிறைவுறுகின்றது. காப்பியத் தலைவனுக்கும் தலைவிக்கும் வில்லனாக அமைந்தது பெருமழைக்காலம். காலத்தின் பிடியிலிருந்து யாரும் தப்ப முடியாது என்பதை இக்காப்பியம் பல செய்திகள் வழி நிறுவியுள்ளது குறிப்பிடத்தக்கது.*

வாழ்க மனிதர்! வாழ்க மனிதம்!
வாழ்க வையகம்! வாழ்க வாழ்கவே!!

# சாதனைக்கு மட்டும் அல்ல...

கமலாசிவம்



அந்தக் கடலின்
அலைகள்
அமைதி காத்தன,

ஏனென்றால்,
மணற் பரப்பில்
மனிதப் பூக்கள்.

தொன்று தொட்டு
தோழமை
உடையவர்
தமிழர்.

ஆனாலும்,
கணினி உலகின்
தலைமுறையோடு

காளைகள்
எவ்விதம்
தோழமை
கொண்டன.

துரத்திய புலியை
முறத்தால் அடித்த
தொன்மை வீரம்
தொலைந்திடவில்லை.
துணையாக
சேர்ந்தது
மகளிர்
கூட்டம்.

இரவிலும்
வானத்து சுடர்
வழிகாட்ட,
வைத்திருந்த
'கைபேசி'
ஒளிகூட்ட,

ஒன்று சேர்ந்த
தமிழர்களின்
உறுதிகண்டு
உலகமே
வியந்து நின்றது.

'சல்லிக்கட்டு'
என்பது,
சாதனைக்கு
மட்டுமல்ல!

சரியான
தலைமுறை
தோன்றலுக்குந்தான்!

# திருவள்ளுவரின் வாழ்வியல் கோட்பாடுகள்

முனைவர் இ.சா. பர்வீன் சுல்தானா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நீதிபதி பஷீர் அகமது மகளிர் கல்லூரி,
சென்னை.

திருக்குறள் நீதி நூல் மட்டுமன்று அது ஒரு வாழ்வியல் நூல். சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியமாகும்.

வள்ளுவம் "தமிழனுக்குரியது" என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவர்க்கும் உரியதாக உள்ளது.

வள்ளுவம் தான் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச்சொல்லிக் கொடுக்கிறது.

இதனை, சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகத் திருக்குறள் படைக்கப் பட்டுள்ளது.

வள்ளுவத்தில் உள்ள ஒவ்வொரு குறளும் மனித வாழ்க்கையின் நெறிகளை, வழிமுறைகளைத் எடுத்தியம்புகின்றன.

மானிடப்பண்புஇயல்புகளுக்கு ஓர் உறைவிடமாய், வாழ்க்கை, வழி நெறிமுறைகளுக்கான வழி காட்டியாய், அமைந்துள்ளது திருக்குறள்.

இன்றைய மனிதனை, அவனது வாழ்க்கையைப் பகுத்து நோக்கி, அறம், பொருள், இன்பம் ஆகிய முதன்மைப் பயனை அறிய வைத்துப் பயனுடைய வாழ்க்கை வாழ வள்ளுவம் வழி காட்டுகிறது.

பன்முகப்பார்வை, தனி மனிதநிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்னும் தளங்களில் மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய பணிகள், எனப் பன்முகக் கூறுகளை அதன் முழுமையான வாழ்வியல் கருத்தாக்கத்தை வள்ளுவம் தந்துள்ளது.

"உண்ணற்க கள்ளை" என்றும், அது "ஈன்றாள் முகத்தேயும் இன்னாதது" எனவும்

"நஞ்சுண்பார் கள் உண்பவர்" என்றெல்லாம், மது அருந்துதலின் தீமையை உணர்த்தித் தனிமனித வாழ்வு சிறக்கும் நெறியைக் காட்டியுள்ளார் வள்ளுவ பெருந்தகை.

இன்றைய மனிதர்களின் உணவு முறையில் சைவ உணவே சிறந்தது என்பதை அறிவியல் ஆய்வுகள் மூலம் மேலைநாட்டு உணவியல் வல்லுனர்கள் தெளிவு படுத்தியுள்ளனர். தெய்வப் புலவர் வள்ளுவர் "புலால் மறுத்தல்" என்னும் அதிகாரத்துள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதனை விளக்கமுறச் செய்துள்ளார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்னும் குறள் மனிதன் உயர்வதற்கான வழியைக் காட்டுகிறது.

அன்பு, பண்பு, நட்பு போன்ற வாழ்வியல் இலக்குகளை எளிய முறையில் மனித மனம் ஏற்கும் வகையில் உரைத்துத் தனி மனித வாழ்க்கையை வள்ளுவர் பண்படுத்தியுள்ளார்.

மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்று விடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவ மிக்கதாக அமைய வேண்டுமெனில் மன மாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது. அதுவே மனித வாழ்க்கை நெறி என்கிறார்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற."

என்னும் குறளில் அறம் என்பது பற்றிய இலக்கிய மரபுசார் கருத்தாக்கத்தை வள்ளுவர் மாற்றியமைக்கிறார்.

அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாத இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல் என்னும் காப்பியக் கருத்தினை மறு ஆய்வு செய்து அறத்திற்குப் புதிய விளக்கங்களைத் தந்தவர் வள்ளுவர்.

மனத்தூய்மை, ஈகை, காதல், என்னும் தூயநெறிகளை வாழ்வியல் அறமாகக் கொள்ள வேண்டியதின் தேவையை உணர்த்தியுள்ளார்.

அன்பு, பண்பு, இன்சொல், நன்றியறிதல் என மனித மாண்புகளை விளக்கும் வள்ளுவர் இவற்றைப் பின்பற்றுவோர் பேற்றினையும் ஒதுக்கியவர் அடையும் இழிவினை களையும் திறம்படக் காட்டுகிறது.

"வாய்மை" என்பதே தலையாய அறம் என்கிறது வள்ளுவம்.

பொய்மை கோலோச்சும் இக்கால மனித சமுதாயத்திற்கு வள்ளுவர் கருத்துக்கள் மலர்ச் சியை உண்டாக்கும் மருந்தாகக் கொள்ளலாம்.

அறங்களில் எல்லாம் வாய்மையே சிறப்புடையது என்பதை

“பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று”

என்னும் குறள் மூலம் அறிய முடிகிறது.

மனிதர்களின் வாழ்க்கை நெறியை உயர்த்தும் கோட்பாடாக வள்ளுவம் மூன்று அறங்களைப் பின்பற்றுமாறு வலியுறுத்துகிறது.

*1. ஆன்மீக அறம்;*

*2. ஈதல் அறம்;*

*3.காதல்*

**அறம்**

கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் சண்டையிட்டுக் கொள்ளும் மனிதனுக்கு, அவனது மனமாற்றத்திற்கு வள்ளுவம் ஒரு புதிய ஆன்மீக அறத்தை தந்துள்ளது.

கடவுளுக்குக் கணக்கும் இல்லை; வழக்கும் இல்லை. அது பேரறிவு; தூய்மையான அறிவு; குணங்களின் திருவுரு; இன்பத்தின் திருவுரு; அன்பின் திருவுரு; அறத்தின் அடையாளம்! என்னும் கருத்து இதனைத் தெளிவுபடுத்தும்.

மனிதப் பண்பினை உயர்த்தும் ஒரு நெறி ஈகை. பிறருக்குக் கொடுத்து மகிழும் மனம் பெற்றால் மனிதன் பக்குவம் அடைந்தவனாகி விடுவான். போட்டியும், பொறாமையும் அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணமும் மனிதனை மிருக நிலைக்குக் கொண்டு செல்லும். ஈகைக் குணம் ஒன்றே மனிதனை மாண்புடைய வனாக்கும். வள்ளுவர் ஈகைக் குணமே உயிரின் ஊதியம் என்பர்.

ஈதல் இசைபட வாழ்தல்; அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு

கொடுத்துப் புகழுடையும் வாழ்க்கையே பயனுடைய வாழ்க்கை என்பதைக் குறள் உணர்த்துகிறது.

காதலையும், ஆண்பெண் உறவையும் வள்ளுவர் நெறிப் படுத்தியுள்ளார்.

காமத்துப்பாலில் காதல், காதலர் உறவு நிலை ஆகிய வற்றை இனிமை பயக்கப் பாடி, அன்பெனும் நெறிக்குள், மனங்களின் சங்கமத்திற்குள், மாசுபடாத வாழ்வியல் படி நிலையை வடித்துத் தந்துள்ளார். களவையும் கற்பையும் வகைப்படுத்தி ”மனிதம்” அடையும் வாழ்க்கை நெறியை வள்ளுவர் வகுத்துள்ளார்.

பிறன்மனை நயத்தலையும், பரத்தையர் உறவையும், பெருங் குற்றமாகச் சொல்லி அன்புடைய காமத்தைச் சமுதாய அறமாகத் தந்துள்ளார்.

ஆண் – பெண் உறவு நிலை, திருமணத்திற்கு முன்னும் பின்னு

மாகக் காதல் நிலை ஆகிய செய்திகளைக் குறள் விரிவாகப் பேசுகிறது.

ஆண், பெண் சமத்துவம் வள்ளுவரின் கொள்கையாகக் காணப்படுகிறது.

ஆண் மேலாதிக்க காலத்தில், அதற்கெதிரான, துணிவுடைய சிந்தனைகளை வழங்கியுள்ள வள்ளுவரின் அணுகுமுறை புரட்சிகரமானது. பெண்களின் உரிமைக்காகவும், உலகியல் மாற்றத்திற்காகவும் அவர் பாடு பட்டுள்ளார். பெண் ஆணுக்கு இணையானவள். ஆற்றல் மிக்கவள் என்பதை,

சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை

என்று ஆற்றலும் அறிவும் நிறையும் மிக்க பெண்களை உலகுக்கு உருவாக்கித் தந்தவர் வள்ளுவர் எனலாம்.

சாதி, மதத்தின் பெயரால் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் சமுதாயக் கொடுமைகள் மாற்ற வள்ளுவரின் குறட்பாக்கள் முனைந்துள்ளன.

பிறப்பால் அனைவரும் ஒன்றே என ஓங்கி ஒலிக்கிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

என்னும் குறட்பா வள்ளுவரை ஒரு சமுதாயப் புரட்சியாளராக அடையாளம் காட்டுகிறது.

வள்ளுவரைத் தமிழ்கூறும் உலகில் தோன்றிய முதல் "பகுத் தறிவாளர்" எனக் கூறலாம். எந்தவொரு கருத்தையும், சிந்தனையையும் உள்ளவாறு ஏற்காமல் பகுத்து நோக்கி, உள்ளத் தெளிவு பெற்று ஏற்க வேண்டும் என்பதே வள்ளுவர் கொள்கை.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்னும் குறட்பாக்கள் இதற்குச் சான்றாகும்.

மரபுகளைத் தகர்த்துப் புதுமையை நிலை நிறுத்துவது வள்ளுவரின் சமுதாயப் பணியாக இருக்கிறது.

அந்தணர் என்போர் அறவோர்
அன்பின் வழியது உயிர்நிலை
மனநலம் மன்னுயிர்க்குக் காக்கம்
அறத்தால் வருவதே இன்பம்

என்றெல்லாம் உயரிய சிந்தனைகளை வழங்கி மனித வாழ்க்கையை மலர்ச்சியடையச் செய்தவர் வள்ளுவர் ஒருவரே எனலாம்.

SRM UNIVERSITY
(Under section 3 of UGC Act 1956)

# தமிழ்ப்பேராய விருதுகள் 2017

## பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன

திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயத்தின் சார்பில் 2012 முதல் ஒவ்வோர் ஆண்டும் 22 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கீழ்க்கண்ட துறைகளில் தேர்ந்தெடுக்கப்படும் 14 பேருக்குத் தமிழ்ப்பேராய விருதுகள் வழங்கப்படுகின்றன.

1. புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது (சிறுகதை, புதினம், நாடகம்) -₹1,50,000/- (ஒன்றரை இலட்சம்)
2. பாரதியார் கவிதை விருது (கவிதை) -₹1,50,000/- (ஒன்றரை இலட்சம்)
3. அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருது (கதை, கவிதை, நாடகம்) -₹1,50,000/- (ஒன்றரை இலட்சம்)
4. ஜி.யூ. போப் மொழிபெயர்ப்பு விருது (மொழிபெயர்ப்பு நூல்) -₹1,50,000/- (ஒன்றரை இலட்சம்)
5. பெ.நா. அப்புசாமி அறிவியல் தமிழ் விருது (தமிழில் அறிவியல் நூல்) -₹1,50,000/- (ஒன்றரை இலட்சம்)
6. ஆனந்த குமாரசாமி கவின்கலை விருது / முத்துத்தாண்டவர் தமிழிசை விருது (சிற்பம், ஓவியம், தமிழிசை சார்ந்த நூல்) - ₹ 1,50,000/- (ஒன்றரை இலட்சம்)
7. விபுலானந்தர் படைப்பிலக்கிய விருது (கவிதை, சிறுகதை, புதினம், நாடகம்) -₹1,50,000/- (ஒன்றரை இலட்சம்)
8. அப்துல் கலாம் இளம் தமிழ் ஆய்வறிஞர் விருது (ஆய்வு நூல்) - ₹1,50,000/- (ஒன்றரை இலட்சம்)
9. சுதேசமித்திரன் தமிழ் இதழ் விருது (தமிழ்க் கலை,இலக்கியப் பண்பாட்டு இதழ்) - ₹ 1,00,000/-(ஓர் இலட்சம்)
10. தொல்காப்பியர் தமிழ்ச்சங்க விருதுகள் (மூன்று அமைப்புகளுக்கு) - ₹ 2,00,000/- (இரண்டு இலட்சம்)
11. பரிதிமாற்கலைஞர் விருது (சிறந்த தமிழறிஞர் - மதிப்புறு தகைஞர்) - ₹ 2,00,000/- (இரண்டு இலட்சம்)
12. பாரிவேந்தர் பைந்தமிழ் விருது (தமிழ்ப் பேரறிஞர் - வாழ்நாள் சாதனையாளர்) -₹5,00,000/- (ஐந்து இலட்சம்)

## விருது விதிகள்

★ முதல் எட்டு விருதுகளுக்கும் உரிய நூல்கள் 2013, 2014, 2015 ஆம் ஆண்டுகளில் முதல் பதிப்பாக வெளிவந்திருக்க வேண்டும். 2016 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல் தகுதி பெறாது.

★ பரிந்துரை எந்த விருதிற்கு என்று குறிப்பிட்டுப் பரிந்துரைக் கடிதத்துடன் பரிந்துரைக்கப்படும் நூல்களின் 5 படிகள் இணைத்து அனுப்ப வேண்டும்.

★ ஜி.யூ. போப் மொழிபெயர்ப்பு விருது தமிழின் சிறப்புகள், கலை, இலக்கியம், பண்பாடு முதலியவற்றை வெளிப்படுத்தும் தமிழ்ப் படைப்புகளைப் பிற மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட நூலுக்கு வழங்கப்படும். இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்ட நூல் 5 படிகளையும் மூலநூல் 5 படிகளையும் அனுப்ப வேண்டும்.

★ சிற்பம், ஓவியம் முதலிய நுண்கலை சார்ந்த நூல் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஆனந்த குமாரசாமி கவின்கலை விருது அல்லது தமிழிசை சார்ந்த நூல் தேர்ந்தெடுக்கப்பட்டால் முத்துத்தாண்டவர் தமிழிசை விருது வழங்கப்படும்.

★ இளம் ஆய்வறிஞர் விருதுக்குரியவர் 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். வயதுச் சான்றிதழ் இணைத்தனுப்ப வேண்டும்.

★ தமிழ்க் கலை, இலக்கியம், பண்பாட்டிற்குப் பங்காற்றும் வார / மாத / காலாண்டு இதழ்களுக்குச் 'சுதேசமித்திரன் தமிழ் இதழ் விருது' வழங்கப்படும். குறைந்தது ஐந்தாண்டுகள் தொடர்ந்து இடைவெளியில்லாமல் வெளிவந்து கொண்டிருக்கும் இதழே பரிந்துரைக்கப்பட வேண்டும். இதன் கடைசி 5 ஆண்டு இதழ்களின் தொகுப்பு 5 படிகள் அனுப்ப வேண்டும்.

★ தமிழ்க்கல்வி, கலை, இலக்கிய, பண்பாடு முதலியவற்றிற்காகப் பாடுபடும் உலகத் தமிழ் அமைப்புகள் / பிற மாநிலத் தமிழ் அமைப்புகள் / தமிழ்நாட்டுத் தமிழ் அமைப்புகளுக்குத் 'தொல்காப்பியர் தமிழ்ச்சங்க விருது' வழங்கப்படும். இவ்விருதுக்குக் குறைந்தது 5 ஆண்டுகள் தொடர்ச்சியாகத் தமிழ்த் தொண்டாற்றியதற்கான ஆவணங்கள், அமைப்பு பற்றிய குறிப்புகளை 5 படிகள் அனுப்புதல் வேண்டும். இவ்விருதுக்கான தொகை வெளிநாட்டுத் தமிழ் அமைப்பிற்கு ரூ.1,00,000/- பிற மாநிலத் தமிழ் அமைப்பிற்கு ரூ.50,000/- தமிழ்நாட்டுத் தமிழ் அமைப்பிற்கு ரூ.50,000/- என்று வழங்கப்படும்.

★ பரிதிமாற் கலைஞர், பாரிவேந்தர் பைந்தமிழ் விருதிற்குப் பரிந்துரைக்கப்படும் தமிழறிஞர்களின் தமிழ்ப் பணிகள், பெற்ற பட்டங்கள், எழுதிய நூல்கள் போன்றவற்றை உள்ளடக்கிய முழுத்தகவல்களைப் பரிந்துரைக் கடிதத்துடன் அனுப்ப வேண்டும். இவ்விருதுகளுக்கான பரிந்துரையை உரியவரோ, மற்றவர்களோ அனுப்பலாம். இவ் விருதுகளுக்குப் புலம்பெயர் தமிழர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ விபுலானந்தர் படைப்பிலக்கிய விருது புலம்பெயர் தமிழர்களின் தமிழ்ப் படைப்புகளுக்காக மட்டும் வழங்கப்படுவது.

★ புலம்பெயர் தமிழர்களின் சிறுகதை, புதினம், நாடகம், கவிதை ஆகிய படைப்பாக்கங்களை விபுலானந்தர் படைப்பிலக்கிய விருதிற்கும் குழந்தை இலக்கியம், மொழிபெயர்ப்பு, அறிவியல் தமிழ், சிற்பம், ஓவியம், தமிழிசை, ஆய்வு ஆகியவை சார்ந்த நூல்களை அந்தந்த விருதிற்கும் பரிந்துரைக்கலாம்.

★ முதல் எட்டு விருதுகளுக்கு வழங்கப்படும் 1,50,000/- ரூபாய் தொகை நூலாசிரியருக்கு 1,25,000/- ரூபாயும் உரிய பதிப்பகத்திற்கு 25,000/- ரூபாயுமாகப் பகிர்ந்து வழங்கப்படும்.

★ விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்படாத நூல்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி அளிக்கப்படமாட்டாது.

★ பரிந்துரைகளையும் நூல்களையும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

பரிந்துரைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள் **15.05.2017**

செயலர், தமிழ்ப்பேராயம், அறை எண் 17, நான்காம் தளம், பல்கலைக்கழக நிருவாகக் கட்டடம், SRM பல்கலைக்கழகம், காட்டாங்குளத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம் - 603 203. தொலைபேசி : 044 2741 7375. www.srmuniv.ac.in/tamilperayam



# ஜெயகாந்தன் பார்வையில் திருலோக சீதாராம்


மூத்த வழக்கறிஞர்
கே. இராஜசேகரன்

ஜெயகாந்தன் பெருமை பாராட்டிய மகா கவிஞர் பன்முக அறிஞர் திருலோக சீதாராம் ஜெயகாந்தனின் வரிகளில்...

"திருலோக சீதாராம் என்பவர் சதா இங்கே திரிந்து கொண்டிருக்கும் சித்த புருஷர்களில் ஒருவர். அவர் நமக்கு தோற்றம் காட்டியதும் நம்மிடம் துலங்கியதும் ஒரு அருள். அவர் எங்கேயும் போவதில்லை. தோன்றியதும் யாவும் மறையும் சூரியன் தோன்றி மறைவது போல, ஆனால், தோன்றியது யாவும் மறையும் என்றால் என்ன பொருள். மறைந்தது யாவும் தோன்றும் என்பதுதான்"

அந்த மகான் எனது பார்வையில்

கவிஞர் திருலோக சீதாராம் பல கவிதைகளை எழுதி பதிப்பித்தவர் தனக்கு மட்டும் ஓர் தனி இடம் கவிதை உலகில்



வேண்டும் என நினையாத ஒரு மாறுபட்ட படைப்பாளி. தன் கவிதைகளை விட பாரதியின் பாடல்களையும், பாரதிதாசன் பாடல்களையும் மக்கள் அறிந்து உணரும் வண்ணம் பல மேடைகளில் பாடிப்பறந்த வானம்பாடி. எமக்கு இருக்கும் கவிதை போதும் இருக்கும் கவிதையை உணர்ந்தால் தமிழ் வளரும் எதற்கு மேலும் பொதி ஏற்ற வேண்டும் பார் சிறக்க ஒரு பாரதி போதாதா என்று பாரதியை பாடி பாடி பாமரனும் அறியும் வண்ணம் செய்த அறிஞன் .

எனக்கு உன்னை தெரியாது. வல்லிக்கண்ணன் தன் கட்டுரை மூலம் எனக்கு அறிமுகம் செய்தார். பசுபதி உன் மூத்த மகன் என் நண்பன் உன் சிறப்பை அவன் கூட எனக்கு சொன்னதில்லை, ஒருகால் சொல்லியிருந்தால் நான் இத்தனைக் காலம் வீண் செய்திருக்க மாட்டேன். முன்னமே உன்னை முற்றும் புரிந்து இருப்பேன். உன் பெருமையை அறிந்து இருப்பேன்.

ஆண் வாரிசு இல்லாத பாரதியாரின் ஆன்மீக புத்திரன் என்று பறை சாற்றி, பாரதியின் துணைவி செல்லம்மாள் உயிர் பிரிந்த போது தலையை தன் மடியில் தாங்கி பிடித்த மகன். இந்த தமிழ் மகனின் நூற்றாண்டு விழா சென்னை ராமகிருஷ்ண ரோடு, தட்சிணாமூர்த்தி அரங்கத்தில் 1.4.2017 அன்று, நடை பெற்றது. ஆவண

படம் வெளியிடபட்டது. ரவி சுப்ரமணியத்தின் உழைப்பின் வடிவம் பாராட்டுக்குரியது.

உரையாற்றிய கு . ராமகிருஷ்ணன், பாரதி கிருஷ்ண குமார், சேக்கிழார் அடிப்பொடி, T.N ராமசந்திரன், திருலோகத்தின் பன்முகங்களையும் ஆழ்ந்து நோக்கி விளக்கினார்.

ஒரு மொழி மூதாதையர் கொடுத்த பெட்டகம், பொக்கிஷம் தலைமுறை, தலை முறையாய் வரும் கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவை முத்துப்பரல்கள் என கொட்டப்பட்டு நமக்கு கொடுக்கப்பட்ட சீதனம் . ஒரு படைப்பாளி 100 ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த காலத்திலும், பெரிய தொரு பிரபலமில்லாமல், வாழ்ந்து மறைந்தவரின் நினைவு படுத்தப்படுகின்ற ஒரு விடயம், தமிழ். இப்போது தான் வளர தொடங்குகிறது என எண்ணத் தோன்றுகிறது . வாழும் போது தான் ஒர் நட்சத்திரமாக வானில் பிரகாசிக்கவில்லை ஆயினும் அவர்தம் 100 வது அகவையிலும் இன்னும் மக்கள் நினைவில் ஒரு படைப்பாளி நிற்கிறான் எனில் அது தான் அவனது பெருமை.

பாரதியை நல்ல கவி என்று மறுத்த காலம், பண்டிதரும், வித்துவான்களும், புலவரும் ஆங்கிலம் அறிந்ததால், ஆங்கிலம் கவிதை படித்தாலே கவுரவம் என்று எண்ணிய காலம். பாரதியை கவிஞன் மகாகவி உலக கவியாக்கிய பெருமை சிலருக்கு உண்டு எனில் திருலோகத்திற்குப் பெரும் பங்கு என கூறலாம்.

ஆயுள் முழுதும் பாரதியை எதுகை மோனை சுருதியுடன் தன் வெண்கலக் குரலில் பாடி பாடி பாமர மக்களுக்கு அறிமுகம் செய்த பெருமை இன்றல்ல என்றும் அழியாது.

தமிழ் உள்ள காலம் மட்டும் திருலோகம் என்கிற ஒரு அமானுஷ்ய கவிஞனுக்கு மரணமில்லை. மரணம் இல்லா பெரு வாழ்வு இது தானோ?

நீ தாங்கி பிடித்த ஏர் உழுபவனும் சிவாஜியும் உன் புகழ் பரப்பும் சிறகுகள். மொழிபெயர்த்த சித்தார்த்தன் மனு நியதி உன் ஆங்கில புலமையையும் தமிழின் சிறப்பையும் பறை சாற்றும் ஆவணங்கள்.

**உனது எண்ணம் :**

“உள்ளம் தேறிச் செய் வினையேல்,
ஊக்கம் பெறுக உழைப்போமேல் பள்ளம்
உயர் மேடாகாதோ”

என்று உழைத்து உழைத்து தமிழ் வளர்த்தாயே. உனக்கு என எதுவும் செய்து கொள்ளாமல் மொழிக்கும், இனத்திற்கும் ஓடாய் உழைத்ததை நினைத்து நன்றி சொல்லும் ஒரு தருணம்.

திருக்குறள் செம்மல் மதுரை ந. மணிமொழியனார் அவர்களின் ‘மணிமொழியம்’ நூல் வெளியீட்டு விழாவில்

# மக்களும் அரசும் வலிமையோடு இருந்தால் இந்தித் திணிப்பைத் தடுக்கலாம்

## கவிப்பேரரசு வைரமுத்து சிறப்புரை




**உ**லகத் திருக்குறள் பேரவை, விநாயகா மிஷன்ஸ் பல்கலைக்கழகம், நியூ காலேஜ் ஹவுஸ், வி.கே.கே. அறக்கட்டளை, தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கம் சார்பில் மணிமொழியம் நூல் வெளியீட்டு விழா சென்னையில் 16,04,2017 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பத்மஸ்ரீ சீர்காழி சிவ. சிதம்பரத்தின் கணீர் குரல் கச்சேரியுடன் விழா துவங்கியது.

குன்றக்குடி பொன்னம்பல அடிகள் நூலை வெளியிட அதன் முதல் பிரதியைக் கவிஞர் வைரமுத்து பெற்றுக்கொண்டார். இதைத் தொடர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் திருக்குறள் செம்மல் ந. மணிமொழியன் அறக்கட்டளை நிறுவுவதற்கு ரூ. 1.50 லட்சத்துக்கான

காசோலை உலகத் தமிழா ராய்ச்சி நிறுவன இயக்குநர் கோ. விசயராகவனிடம் வழங்கப்பட்டது. மணிமொழி யனாரின் இணைய தளத்தைத் தொழிலதிபர் டி.ஆர்.ஜி. குணசேகரன் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் கவிஞர் ஆற்றிய சிறப்புரையில்

உலகில் மதத்தைக் கடந்து அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட ஒரே நூல் திருக்குறள்தான். நிலம், இனம் போன்ற கலாசாரத் தால் அடையாளப்படும் சமூகத்தை விட அறிவால் அறியப்படும் ஒரே சமூகம் தமிழ்ச் சமூகம். தமிழனுக்கு அறிவு அடையாளமாக விளங்குவது திருக்குறள். மது விலக்கை முதன் முதலில் வலியுறுத்தியவர் திருவள்ளுவர். அத்தகைய சிறப்புமிக்க நம் தமிழ் இனம் மதுவை ஒழிக்க முன் வரவேண்டும். குறிப்பாக இளைஞர்கள் முழு மது விலக்கை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக மக்களும், அரசும் வலிமையோடு இருந்தால் தமிழகத்தில் இந்தித் திணிப்பு இருக்காது, தடம் பதிக்காது. ஒற்றுமையின்மையால், இந்தி அந்த இடைவெளியைப் பயன்படுத்தி நுழையப் பார்க்கிறது. அதனைக் கருத்தில் கொண்டு மக்களும், அரசும் வலிமையோடு ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்றார்.

குன்றக்குடி அடிகள் வழங்கிய வாழ்த்துரையில்

மனித மனத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் கற்பதன் மூலமே அகற்ற முடியும் என திருக்குறள் மூலம் திருவள்ளுவர் எடுத்துரைத் தார். வாழ்க்கையின் நெறி முறைகளை உலகிற்கே எடுத்துக் காட்டியது திருக்குறள். அத்தகைய சிறப்புமிக்க திருக்குறளைப் பறைசாற்றிட அயராது பாடுபட்டவர் மணிமொழியன் என்றார்.

விநாயகா மிஷன்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஏ.எஸ்.கணேசன், பேராசிரியர் இரா. மோகன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழா நிறைவில் டாக்டர் அனுராதா கணேசன் நன்றியுரை நல்கினார். விழா நிகழ்ச்சிகளை மதுரை மார்சல் முருகன் தொகுத்து வழங்கினார்.

✪

# பார் புகழும் சீர்மிகு சித்தர்கள்

மாண்புமிகு மனித வாழ்வில் சிறந்தவர்களாகக் கருதப்படுபவர்கள் சித்தர்கள் ஆவார்கள். புளியம் பழம் போல உலக வாழ்வில் ஒட்டியும் ஒதுங்கியும் இவர்கள் வாழ்ந்து வந்தனர். ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும் மன நிலை கொண்டு விளங்கினர். அழுகி, அழிந்தொழியும் உடலில் இவர்கள் அழியாப் புகழைக் கண்டுணர்ந்தனர். “அடக்கம் அமரருள் உய்க்கும்” என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கிற்கு இலக்கணமாய் இச்சித்தர்கள் திகழ்ந்தனர்.

அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை சற்று உற்று நோக்கினால் அவர்களது சிறப்பினை உணரலாம். அறியாமையைப் போக்கும் ஆசானாகவும், நோய் தீர்க்கும் மருத்துவராகவும் விளங்கி மானுடர்கள்” வையத்து வாழ்வாங்கு வாழ” வழி அமைத்துக் கொடுத்தனர். சித்தர்கள் யாவரும் தம் சூழ்நிலைச் சிந்தனையால் மானுடரின் ஊழ்வினை வலிகளைக் கண்டறிந்தனர். அனைத்துக்கும் மேலாக சாதியைச் சாடிய சான்றோராகவும் சமயச் சீர்திருத்த செம்மல்களாகவும் திகழ்ந்தனர்.

**பேராசிரியர் முனைவர்**
**கா. முருகேசன்,**
தமிழக அரசு கலைக் கல்லூரி
பணிநிறை பேராசிரியர்.

சித்தர்களின் வரலாற்றை அறிந்து கொள்ள நாம் ஆராய்கையில் நம் கண்ணுக்குத் தெற்றெனப் புலப்படுபவர் நம் தேசியக் கவி மகாகவி பாரதியார் ஆவார். பாரதியார் தாமும் சித்தர் பரம் பரையைச் சேர்ந்தவர் என்று கூறிக் கொள்வதில் மிகுந்த பெருமை கொள்கிறார்.

“எனக்கு முன்னே சித்தர்
பலர் இருந்தாரப்பா

யானும் வந்தோம் ஓர் சித்தர்
இந்த நாட்டில்”

என்பது அவர் கூற்று. சித்தர்களுக்கெல்லாம் சித்தர்களாய் விளங்கி இவ்வுலக வாழ்வை நல்வழிப்படுத்திய பெருமை திருமூலர் அவர்களைச் சாரும். சித்தர்களைப் பற்றி தொல்காப்பியர் பேசும்போது, அவர்கள் “நிறை மொழி மாந்தர்” எனப் புகழாரம் சூட்டுகிறார். நம் வள்ளுவப் பெருந்தகையும் சித்தர்களுக்கு அதே அடைமொழியைச் சூட்டி மகிழுகிறார். பட்டினத்தார், சிவவாக்கியர், பாம்பாட்டிச்

சித்தர், அழுகுணிச்சித்தர், பத்திரி கிரியார் ஆகிய இவர்கள் தமிழ் கூறும் நல்லுலகில் வாழ்ந்த தலை சிறந்த சித்தர்கள் ஆவார்கள்.

சித்தர்கள் யோகம், தியானம் போன்ற பயிற்சிகளில் தீவிர மாகச் செயல்பட்டனர். இப் பயிற்சிகள் மூலம் தங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்தப் பயிற்சிப்படுத்தினார். சித்தர் களை மேல் நோக்கி எடுத்துச் செல்ல இப்பயிற்சிகள் அவர் களுக்கு உதவியாய் நின்றான. இந்நிலைகளை சித்த விருத்தி நிரோஷம் என்று பெயரிட்டனர். சிந்தையிலே களங்கமற்றவர் களே சித்தர்கள் என்பது அகத்தியர் கண்ட உண்மை யாகும். செகமெல்லாம் சிவ னென்று உணர்ந்தவர்களே சித்தர்கள்.

அஷ்டமா சித்திகள் என்னும் எட்டு மாபெரும் ஆற்றல்கள் கை வரப் பெற்றவர்கள் சித்தர்கள். சித்தர்களின் ஆற்றலையும் பெருமையையும் பேசவந்த பாம்பாட்டி சித்தர் கூறுகிறார்.

''தூணைச் சிறு துரும்பாக
தோன்றிடச் செய்வோம்;
துரும்பைப் பெருந்தூணாக
தோன்றச் செய்வோம்;
ஆணைப் பெண்ணும் பெண்ணை
ஆணுமாகச் செய்திடுவோம்;
எட்டுமலைகளைப் பந்தாய்
எடுத்து எறிந்திடுவோம்;
ஏழு கடலைக் குடித்து ஏப்பமிடுவோம்.''

உண்மை ஞானம் தெரிந்தவர்கள் இரவு பகல் வேறுபாடின்றிப் பேய் போல் திரிவர். இன்பம் – துன்பம், நன்மை – தீமை ஆகிய உணர்வுகள் இன்றி பிணம் போல் கிடப்பர். இடுகின்ற பிச்சையினை நாய்போல் அருந்துவர். மங்கையரைத் தாய்போல் கருதுவர். உலகம் அனைவரையும் சுற்றமாகக் கருதி அன்பு வாய்ப்பர். கள்ளங் கபடமற்ற உள்ளம் கொண்ட சேய்போல் இருப்பர்.

சித்தர்கள் தேவாதிகள் அல்ல. மனித நேயமற்ற மதத்தை அவர்கள் ஆதரிக்கவில்லை. மதத்தின் பெயரால் மண்டிக் கிடந்த மூடப்பழக்க வழக்கங் களைத் தகர்த்தெறிய முனைந் தனர். சுருங்க கூறினால் சித்தர்கள் சமயச்சீர் திருத்தவாதி களாகத் திகழ்ந்தார்கள்.

இறைவன் குடி கொண்டிருக்கும் இடம் மனிதரின் உள்ளமே அன்றிவேறில்லை என்பது சித்தர் கருத்து; "உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்" என்ற திருமூலர் வாக்கு இதற்கு வித்தாகும்.

சித்தர்கள் அவதார புருஷர்கள்; சமயத்தின் நோக்கமே மனித நேயம் தான் என்பதை வலியுறுத்தினார்கள். எல்லாரும் தம்முயிர் போல எண்ண வேண்டினார்கள். சித்தர்கள் கூறியுள்ள இவ்வாக்கு மனித குலம் உள்ள வரை நிலைத்து நிற்கும்.

✪

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

பொன். மாயவன்

நல்ல பொழுதையெல்லாம்
தூங்கிக் கெடுத்தவர்கள்

நாட்டைக் கெடுத்ததுடன்
தானும் கெட்டார்

*பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடியது. இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது.*

*சுமார் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக கிடப்பில் போடப்பட்டுள்ள பம்பை – அச்சன் கோவில் – வைப்பாறு இணைப்புத் திட்டம் நிறைவேறியிருந்தால், கேரளாவிற்கு தேவையான மின்சாரமும் தென்தமிழ்நாடு தஞ்சையைபோல் நெற்களஞ்சியமாய் மாறியிருக்கும் என்று சொல்வார்கள். தற்போது நிலை வேறு.*

*இதனை நினைக்கும் போது நமக்கும் ஏக்க பெருமூச்சே மிஞ்சுகிறது.*

*இத்திட்டம் சாத்தியமானது தான் என்று மத்திய நதி நீர் மேம்பாட்டு நிறுவனம் 1954 – ஆம் ஆண்டு அனுமதி கொடுத்தது.*

*இத்திட்டத்தின்படி கேரள மாநிலம் பத்தனம் திட்டா மாவட்டம் தெக்கு தோட்ட கிராமத்தில் பூனைமேடு என்ற இடத்தில் பம்பையின் கிளை நதியான பம்பையாற்றின் குறுக்கே ஒரு அணையும், அச்சன்கோவில் கல்லாற்றில் இன்னொரு அணையும் கட்டப்படும் என்றும், இந்த இரண்டு அணையும் மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு குகைப்பாதை மூலம் இணைப்பு ஏற்படுத்தப்படும். பின்னர் அச்சன்கோவில் கல்லாற்றின் இன்னொரு புறத்தில் மேலும் ஒரு அணையை கட்டி, இங்கு மலையைக் குடைந்து குடைந்து குகைப் பாதை ஏற்படுத்த வேண்டும். இந்த குகைப் பாதை முன்னூறு அடி விட்டமும் ஒன்பது கிலோ மீட்டர் நீளம் வரை அமைத்து, தமிழக எல்லையான மேக்கரை கிராமத்திற்கு வந்து சேரும்.*

இது தென்காசி மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள அடவி நயினார் அணை பக்கத்தில் உள்ளது.

இதைத் தொடர்ந்து தனி கால்வாய் வெட்டி நிட்சோப நதி, கடையநல்லூர், பாம்பு கோவில் சந்து, அரியநாயகபுரம், சங்கரன் கோவில், தளவாய்புரம், செந்தட்டியூர் சாலை, செல்வகுளம், பெரியார்குளம் வழியாக அழகர் ஓடையில் வந்து அடையும்.

இந்த அழகர் ஓடையைதான் வைப்பாற்றின் துணை நதி என்பது குறிப்பிட தகுந்த செய்தியாகும்.

அழகர் ஓடையானது. திருவேங்கிடம் வழியாக வெம்பக்கோட்டை வழியாக அணைக்கு வந்து, அங்கிருந்து விருதுநகர் சாத்தூர், இருக்கன்குடி வழியே பயணித்து தூத்துக்குடி மாவட்டம். விளாத்திக் குளத்தில் பசுமையாக்கி வேம்பர் அருகே உள்ள வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இது சுமார் 51 கிலோ மீட்டர் தூரம் வரை, மூன்று மாவட்ட மக்களுக்கு பயன் அளிக்கும் அருமையான திட்டமாகும்.

இத்திட்டம் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக, பல ஆண்டுகளாக போராடி வரும் போராளி சங்கரன் கோவில் சேர்ந்த ஐயா, செல்லையா அவர்கள். சர்வோதயா சங்க அமைப்பாளரும் அதன் நிர்வாகியும் ஆவார். இவர் கர்ம வீரர் காமராஜருக்கு மிகவும் நெருக்கமானவரும் கூட. அவர் “காமராஜர் ஆட்சியில் 12 அணைகள் கட்டி சாதனை படைத்தவர். அவர் முதல்வராக இருக்கும்போது, வைகை ஆற்றுக்கு தெற்கே, தாமிரபரணிக்கு வடக்கே உள்ள பகுதிகளில் ஆண்டு தோறும் அடிக்கடி வறட்சி பஞ்சம் ஏற்படுவது வாடிக்கை யானது. இந்த வறட்சியைப் போக்க என்ன வழி என தீவிரமாக சிந்தித்ததின் விளையே இத்திட்டம் உருவாவதற்கு காரணமாகும். கேரள எல்லையில் உற்பத்தி யாகி மேற்கே நோக்கி ஓடி அரபிக் கடலில் வீணாக கலக்கும் பம்பை மற்றும் அச்சன்கோவில் ஆறுகளில் 230 டி.எம்.சி. தண்ணீர் என்ற விபரம் அறிந்து, அதிலிருந்து வரும் 23 டி.எம்.சி. தண்ணீரை கிழக்கு நோக்கி திருப்பும் திட்டம்தான் பம்பை – அச்சன்கோவில் – வைப்பாறு இணைப்புத் திட்டமாகும்.

மேற்கண்ட திட்டத்திற்கு 1998 – ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தேசிய நதி நீர் மேம்பாட்டு நிறுவனம் ஒப்புதல் கொடுத்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அன்றைக்கு முதல்வராக இருந்த கருணாநிதி மாநில அரசின் தன் பங்களிப்பான 500 கோடி ரூபாய் ஒதுக்கி யிருந்தால் இத்திட்டம் செயல் பாட்டிற்கு வந்திருக்கும். இப்பகுதி நல்ல செழிப்பு பெற்று அவர் பேரைச் சொல்லியிருக்கும் என ஆதங்கம் படுகிறார்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி தமிழ் உணர்வாளர் வியனரசு “பம்பை அச்சன்கோவில் வைப்பாறு திட்டத்திற்கு கேரள அரசு ஒப்புதல் தெரிவித்திருந்தது. ஏனென் றால், இத்திட்டத்தின் மூலம் கட்டப்படும் மூன்று அணை களிலிருந்து 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப் பட்டு, அதன் மூலம் ஆண்டிற்கு 1114 மில்லியன் யூனிட் மின்சாரம் கிடைக்கும் இதனால் கேரளாவிற்கு மின் தேவையில் 33 மூன்று விழுக்காடு கிடைத்துவிடும்.

மேலும் தமிழ்நாட்டிற்கு நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஒரு லட்சம் ஹெக்டர் நிலங்களில் மூன்று போகம் சாகுபடி செய்ய முடியும். இதுபோக 55 லட்சம் பேருக்கு குடிநீர் கிடைக்கும். நிலத்தடி நீர் உயரும். இத்திட்டமானது தமிழ்நாட்டிற்கு வர பிரசாதமாகும் என தமிழக முதல்வருக்குக் கடிதம் எழுதி யுள்ளார்.

தமிழக அரசு கோடிக்கணக் கான ரூபாய்களை செலவு செய்து இலவச திட்டங் களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இதை யெல்லாம் எடுத்து ஏறக்கட்டி விட்டு தொலைநோக்குப் பார்வையுடன் இத்திட்டத்தை செயல்படுத்த முன்னுரிமை வழங்க வேண்டும். மத்தியரசும் தேவையான நிதி உதவி அளித்து இத்திட்டம் நிறைவடைய போதிய கவனம் செலுத்த வேண்டும்.

தானாயெல்லாம் மாறும் என்பது
பழைய பொய்யடா,
பழைய பொய்யடா.

......... இந்தத் தங்க முயற்சிக்குப் பங்கம் விளைத்திடும் தன்மையை வெட்டி மிதித்திடுவோம். பாட்டுக்கோட்டையின் பாதையில், நாம் போராட் டத்தை முன்னெடுப்போம்!



தமிழ்நாடு அரசு பொதுநூலகத் துறையுடன் இணைந்து இந்தியப் படைப்பாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் நடத்திய

உலகப் புத்தகத் தின விழா


# புத்தகக் கண்காட்சி





**உ**லகப் புத்தகத் தினத்தை தமிழ்நாடு அரசு பொதுநூலகத் துறையுடன் இணைந்து இந்தியப் படைப்பாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் சென்னைப் பெருநகரில் 25 இடங்களில் ஏப்ரல் 20ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை புத்தகக் கண்காட்சியை நடத்தியது.

'மக்களை நோக்கி புத்தகங்கள்' என்ற முழக்கத்தை வலியுறுத்தி நூறு பதிப்பாளர்கள் பங்கேற்ற இப்புத்தகக் கண்காட்சியை 20.04.17ஆம் நாளன்று சென்னை அண்ணாசாலையில் உள்ள மாவட்ட மைய நூலகத்தில் பொது நூலகத் துறை இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் அவர்கள் துவங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.






விழாவிற்கு சென்னை மாவட்ட நூலக அலுவலர் திரு. ச. இளங்கோ சந்திரகுமார் அவர்கள் தலைமையேற்று வாழ்த்துரை வழங்கினார். முதல்நிலை நூலகர் த. வெல்லங் ரோஸ் அவர்களும் இரண்டாம் நிலை நூலகர்





வே. தணிகாசலம் அவர்களும் கருத்துரை வழங்கினர்.

விழாவில் பங்கேற்ற அனைவரையும் வரவேற்று இந்தியப் படைப்பாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத் தலைவர் டாக்டர் பெ. மயிலவேலன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். விழா நிறைவில் பொருளாளர் முனைவர் மோ. பாட்டழகன் நன்றியுரை நல்கினார்.






முல்லை பதிப்பகம் மு. பழனி, நாதம்கீதம் எஸ்.கே. முருகா , நிவேதிதா பதிப்பகம் தேவகி இராமலிங்கம், எல்.கே.எம். பதிப்பகம் புவனேஸ்வரி கார்த்திகேயன், கிளாசிக் பதிப்பகம் எம். சாதிக் பாட்சா மற்றும் அ. குமரன், என்.ஆர். சுதாகர், சி. தங்கபழனி, மேன்மை இதழாசிரியர் மணி ஆகியோர் முன்நின்று உலக புத்தகத் தின விழாவை திருவிழாவாக்கிச் சிறப்பித்தனர்.



மக்களை நோக்கி புத்தகங்கள் என்ற முழக்கத்தை முன்வைத்து சென்னை அண்ணாநகர் நூலகத்தில் முன்னாள் துணைவேந்தர் முனைவர் க.பா. அறவாணன் அவர்கள் கண்காட்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ஞானாலயா கிருஷ்ணமூர்த்தி, பேராசிரியர் தாயம்மாள் அறவாணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவிற்கு வந்த அனைவரையும் வாசகர் வட்டத்தின் தலைவர் அவர்கள் வரவேற்று வரவேற்புரையாற்றி னார். நூலகர் நன்றியுரை யாற்றினார்.

சென்னை சாலிக்கிராமம் பகுதியில் உள்ள நூலகத்தில் பத்திரிக்கையாளர் சங்கத் தலைவர் இரா. சுபாஸ் அவர்கள் புத்தகக் காட்சியை துவக்கி



வைத்தார். தேனாம்பேட்டை பாரதிதாசன் சாலையில் உள்ள நூலகத்தில் புத்தகக் காட்சியை இலக்கியப் பேரொளி நீதிபதி மூ. புகழேந்தி அவர்கள் துவக்கி வைத்தார். அடையாறு காந்தி நகர், திருவான்மியூர், கே.கே. நகர், எருக்கஞ்சேரி, இராயபுரம், பெரியார் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள முழுநேர நூலகங்களில் வாசகர் வட்டத்தின் தலைவர்கள் கண்காட்சியை துவக்கி வைத்தனர். பிற கிளை நூலகங்களில் நடத்தப்பட்ட கண்காட்சிகளை அப்பகுதி பெரியவர்கள் முன்னிலை ஏற்று துவக்கி வைத்தனர்.

கோடை வெப்பத்தின் கொடுமையை பொருட் படுத்தாமல் மாணவர்களும், குழந்தைகளும் புத்தகக்



கண்காட்சியை காண நூலகத்தை நோக்கி வந்த காட்சி பங்கேற்ற பதிப்பாளர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்தது. வணிக நோக்கமின்றி மக்கள் விழிப்புணர்வுக்காக நடத்தப்பட்ட இக்கண்காட்சிக்கு வருகை தந்த மாணவர்கள் அனைவருக்கும் ஒரு புத்தகம் பரிசாக வழங்கப்பட்டது.

புத்தகக் காதலர்கள் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு நூல்களை வாங்கிச் சென்றனர்.





கலை நிகழ்ச்சிகளும் நடத்தப் பட்டன. இதில் பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்று வாசகர்களின் பாராட்டுகளைப் பெற்றனர்.

இராயபுரம் சிங்காரவேலர் மணிமண்டபத்தில் நூலகத்தில் வாசிப்பை நேசிப்போம் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்களை மாவட்ட நூலக அலுவலர் இளங்கோ சந்திரகுமார்




தலைமையேற்று நடத்தினார். புலவர் ப. வீரமணி. எழுத்தாளர் சங்கத் தலைவர் நல்லாமூர் கோ. பெரியண்ணன், ஜெ. ஜேசுதாஸ் ஆகியோர் கருத்துரை வழங்கினர். பரதநாட்டியம், நையாண்டி தர்பார் என மாணவர்களின் கலை நிகழ்ச்சி களும் நடத்தப்பட்டன. சாலிக் கிராமம், தேனாம் பேட்டை ஆகிய பகுதிகளில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்ற சமூக மாற்றத்துக்கான தூண்டுதலை நூலகத் துறையின் மூலம் உருவாக்க வேண்டும் என்ற பெருநோக்கோடு செயலாற்றி வரும் கல்வித் துறைச் செயலாளர் திரு உதயசந்திரன் மிகிஷி அவர்களையும் பொதுநூலகத் துறை இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் அவர்களையும் போற்றி வாழ்த்தி பாராட்டினர்.

✪

# இலக்கியங்கள் காட்டும் பெண்களின் பண்புகள்

**சு. ஜெயசூரியா,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அன்னை தெரசா மகளிர்
பல்கலைக்கழகம்,
கொடைக்கானல்.

**முன்னுரை**

*"இலக்கியம் காலத்தின் கண்ணாடியாக திகழ்கிறது. சமுதாயத்தின் அளவுகோலாகவும் சமகால உண்மைகளையும் வாழ்வியல் கோட்பாடுகளைக் கூறுவதுதான் இலக்கியம் ஆகும். ஆனால் சில இலக்கியங்கள் ஆணை உயர்த்துவதாகவும், பெண்களைத் தாழ்வாகவும் காட்டுகின்றன."*

''வாழப் பிறந்தவன் ஆண். அவனுக்கு வழி துணையாக வேண்டியவள் பெண்.''

ஆளப் பிறந்தவன் ஆண். அவனுக்கு அடங்கி நடக்க வேண்டியவள் பெண்.''

''தலைமை இடம் ஆணுக்கும் அடிமை நிலை பெண்ணுக்கும்''

*என்று கூறுகின்றது.*

*மேற்கூறிய சமுதாயக் கொடுமைகளை சில இலக்கியங்கள் காட்டுகின்றன என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*



**1. அச்சம்**

*அச்சம், மடமை பெண்களுக்கு அணிகலமாக காட்டப் படுகிறது.*

''பெருமையும் வளனும் ஆரு உமேன'' (தொல். பொருள் - 95)

''அச்சமும் மடமும் நாணமும், பயிர்ப்பும்
நிச்சமும் பெண்பாற்குரிய என்ப'' (தொல். பொருள் - 95)

*பெண்கள் அச்சத்தோடும் இருக்க வேண்டும். இதுவே பெண்களுக்கு அழகு என்றும் அறியாமையும் அருவருப்பையும் உடையவர்களாகவே பெண்களை இலக்கிய நூல்கள் சித்தரிக்கின்றன.*

''பெண்களுக்கு அணிகலன் நாணுடமை'' (திரிகடுகம் - 52) *என்று கூறப்படுகிறது.*

**2. பேதைமை**

''பேதைமை என்பது மாதர்க்கணிகலம்'' (கொன்றைவேந்தன் - 60) *என்கிறார் ஔவையார்.*

*பிறர் சொல்கின்ற கருத்தை அறியாது, தான் பார்த்தவற்றை மறந்து, முயலுக்கு கொம்பு இருக்கிறது என்று சொன்னால் கூட "ஆம்" என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். (மணிமேகலை வரி 111 – 116) என இலக்கியங்களில் கூறப்படுகின்றன.*

*"தையல் சொல் கேளேல்" என்று பெண்கள் அறிவில்லாதவள், அவள் சொல்லுக்கு யாரும் மதிப்புக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என அன்றைய சமூக அமைப்பில் இருந்தது. அது தர்மமாகவே கருதப்பட்டது.*

**3. அடக்கம்**

*அடக்கம் என்பது பெண்மைக்கே உரியது. ஆண் எது செய்தாலும் ஏன் என்று கேட்கக் கூடாது என்று கூறப்படுகிறது. ஆண்களின் சொற்கள் அத்துமீறிச் சென்றாலும் மனைவியர்கள் "மறைபியர் அறியாமை" இருக்க வேண்டும் அடுத்தவரிடம் இதனைக் கூறக்கூடாது.*

''படிதாண்டாதா பத்தினி''

*கணவரின் கொடுமையினின்று விடுதலை கேட்டு வீதிக்கு வந்துவிட்டால் அவர்கள் கற்பிழந்தவர்களாகக் கருதப்படுவாள் என்ற சில இலக்கியங்கள் கூறுகின்றன.*

**4. பேசாதிருத்தல்**

*பேசுவது என்பது ஒருவரின் அடிப்படை உரிமையாக இருக்கிறது. இந்த உரிமை பெண்களுக்கு மறுக்கப் படுகிறது.*

''பெண்டிற்க் கழகெதிர் பேசாதிருத்தல்'' - குறுந்தொகை

*பெண்களோடு பேசுவது தவறு என்கிறது நாலடியார் பாடல் வரிகள்.*

“பேதையோடு யாரும் உரையற்க” (நாலடியார் - 7)

“பெண்ணொருத்தி பேசில்
பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேசில் விழும்
வான்மீன்கள் - பெண் மூவர்.
பேசிவலை கவரும் பேதையே
பெண் பலர் தாம்
பேசிற் கென்னமோ பின்”
(நீதி வெண்பா - 3)

*ஒரு பெண் பேசினால் பூமி அதிருமாம், இரண்டு பெண்கள் பேசினால் நட்சத்திரங்களே விழுமாம், மூன்று பெண்கள் பேசினால் கடலே வற்றிப் போகுமாம் என்று கூறிப் பெண்களின் பேச்சுரிமையை மறுக்கிறது சில இலக்கியங்கள். பெண்கள் பேசினாலும் சிரித்தாலும் கற்பு போய்விட்டதாக இலக்கியங்கள் காட்டுகின்றன.*

## 5. கற்பு

*கற்பு என்ற சொல் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானதே எனலாம். ஆனால் இலக்கியங்களைப் பொறுத்த அளவில் இது பெண்களுக்கு மட்டும் உரிமையாக்கிக் காட்டப் படுகிறது. சிலப்பதிகாரத்தில்,*

“கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்”

*கணவன் இறந்துவிட்டால் மனைவியருக்குச் செய்யத்தக்கது ஒன்றுமில்லையாம்.*

## 6. கணவன் வழிபாடு

*இலக்கியங்களில் கடவுன் வழிபாட்டை ஆண்களுக்குக் காட்டி, பெண்களுக்குக் கணவன் வழிபாட்டைக் கற்பிக்கின்றன.*

“தெய்வம் தொழாஆள் கொழுநன்
தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை”
- குறள் 55

*பெண்கள் கடவுளை வழி படுவதை விடக் கணவனை வழிபடுவது சிறந்தது எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.*

## 7. அழகு

*இலக்கியத்தில் வருகின்ற பெண்களின் அடிப்படைச் சிறப்பு அழகு, காப்பியத் தலைவியின் அழகு உச்சி முதல் பாதம் வரை வருணனைச் செய்யப்பட்டுள்ளது.*

“ஆற்று மணல் போன்ற கூந்தல்
பிறை போன்ற நெற்றி
வில் போன்ற புருவம்
அழகிய குளிர்ச்சியுடைய கண்
பூவின் இதழ் போன்ற சிவந்த வாய்...”

*இவ்வாறு பெண்களை அழகுப் பதுமைகளாக ஆக்கிப் பார்ப்பதில் இலக்கியங்கள் தனி இன்பம் கண்டுள்ளன. அழகு என்பது ஆண்கள் ரசிப்பதற்கு மட்டுமே என்று கற்பிப்பதாகவே பல வர்ணனைகள் அமைகின்றன.*



# இலக்கியங்களில் பெண்கள் நிலை

## 1. தொல்காப்பியம்

*தமிழில் கிடைத்த முதல் நூலாகத் தொல்காப்பியம் கருதப்படுகிறது.*

நாணும் மடனும்
பெண்மையே ஆகலின்
கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும் நிறையும்...
...கிழிவாள் மாண்புகள்
(தொல்காப்பியம் 150)

*அச்சம், நாணம் மடம் (அறியாமை) கற்பு ஒழுக்கம் பொறுத்துப் போதல் ஆகியன பெண்களிடத்து எப்போதும் இருக்க வேண்டிய நற்குணங்கள் என்பது இதன் பொருள்.*

"காமக்கிழத்தி மனையோள் என்றிவந்"

(தொல் பொருள் 144)

*ஓர் ஆண்மகன் தன் மனைவியைத் தவிர காமக்கிழத்தி – பரத்தையர் போன்ற பெண்களோடு தொடர்பு கொண்டு வாழ்ந்தான்.*

"தன்னுறு வேட்கை
கிழவன் முற்கிளத்தில்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை"

*தன் ஆசையை மனைவி கணவனிடம் சொல்லக் கூடாது என்று கூறுகிறது.*

## 2. சங்க இலக்கியங்கள்

*"சங்க காலம் பொற்காலம்" என்று அழைக்கப்படுகிறது. இல்லற வாழ்க்கைக்குப் பெண்கள் ஒளி வீசும் மணி விளக்காய் கருதப்பட்டனர்.*

"மனைக்கு விளக்காகிய வாணுதல்"
(புறநானூறு)

*கணவனும், மனைவியும் கருத்தொருமித்து வாழ்வதே வாழ்க்கை என்று கூறப் பட்டது.*

"ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"
(கலி 16)

*புறநானூற்றுப் பாடல்கள் பல வீரத்தையும், நாட்டுப்பற்றையும், கடமையுணர்வு இவைகளைச் சித்தரித்துக் காட்டுகின்றன.*

*விருந்தினரை உபசரிக்கும் பண்பு பெண்களின் பிறவிக் குணமாகக் கருதப்பட்டது.*

*பெண்ணிற்குத் திருமணம்தான் இலட்சியம் என்ற நிலையில் அமைகின்றது.*

### 3. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் பெண்களின் உரிமையைப் பேசுவதாகவும், பெண்களின் பெருமையை பேசுவதாகவும் கூறப்படுகிறது. ஆனால் கண்ணகி தனக்குத் துரோகம் செய்த கணவனைக் கடிந்து கூடப் பேசாது பொறுத்துக் கொண்டிருந்தாள்.

கணவன் கள்வன் என்ற பழிச்சொல் ஏற்று கொலை செய்யப்பட்ட உடன் பொங்கி எழுகின்றாள். சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் பல இடங்களில் பெண்ணடிமையை மிக நாசூக்காக கூறுகிறார்.

கோவலன் மாதவியோடு வாழ்ந்த வாழ்க்கை பற்றி கூறை கூறப்படவில்லை மாறாக

“வழி நடை வருத்தம் உற்றனை இத்துணையும் செய்து களைத்தனை

நீயும் உண்பாயாக” என்கிறது இக் காப்பியமாகும்.

### 4. மணிமேகலை

இந்நூலில் பெண்களின் ஆடல், பாடல், அழகு மயக்கும் திறன் முதலியன சுட்டிக் காட்டப் பட்டுள்ளன.

“ஆடலும், பாடலும் அழகுங் காட்டிச்
சுரும்பு நாண் கரும்புவில்”
அரும்புகளை தூவச் செருக்கயல்
வண்டிற் துறக்கும் தொண்டி மகளிரை
(18 உதயகுமாரன் அம்பலம்
புக்ககாதை 103 - 109)

ஆடவர்களின் இன்பத் தேவைக்காக பல கலைகளைப் பெண்கள் கற்க வேண்டும். ஒரு கணிகை பெண் கீழ்க்கண்ட வற்றில் திறன், மிக்கவளாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

1. அரசர்க்கு ஆடும் கூத்து
2. மக்களுக்கு ஆடும் கூத்து
3. தாளத் திறன்
4. யாழ் மீட்டல்
5. அக நாடகம், புற நாடகம்
6. மத்தளம்
7. குழல் இசைத்தல்
8. பந்தாடுதல்
9. சமையல் கலை
10. நறுமணப் பொடியால் நன்னீராடல்
11. உடம்பால் செய்யும் 64 கலைகள்
12. பிறர் கருதியதை அறியும் திறன்
13. சொல்வன்மை
14. எழுது கோலினால் எழில்பட வரையும் தொழில்
15. பூக்கட்டுதல்
16. ஒப்பனைச் செய்தல்
17. மாலை கட்டும் திறன்
18. சோதிடம்
19. அரங்கேறும் கலை

என யாவற்றிலும் திறன் பெற்றவளாக விளங்கியும் சமுதாயச் சூழல் ஆணின் காமத்திற்கு ஆட்பட விரும்பாததாலும் தாயின் விரக்தியாலும் மாதவிக்குத் துறவு வாழ்க்கை கிட்டியது.

மணிமேகலை தவக்கோலம் பூண நேரிட்டது அவளுக்கு இதுவே இறுதி முடிவாக மாறுவதாக அமைகிறது.

### 5. திருக்குறள்

திருவள்ளுவர் பெண்களுக்கு மென்மை சிறப்பானது என்று வலியுறுத்துகிறார்.

''நன்னீரை வாழி அனிச்சமே
நின்னினும்
மென்னீரால் யாய்வீழ் பவள்

(குறள் 111)

தன் கணவனையே கடவுளாக நினைக்க வேண்டும். பெண்ணை உணர்வுள்ள பெண்ணாக நோக்குகிறார். கணவனுக்கு கட்டுப்பட்டவள். தன் எல்லையை மீறாதவள் எனத் திருவள்ளுவர் சித்தரிக்கிறார்.

### 6. நீதி இலக்கியங்கள்

கி.பி. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6 நூற்றாண்டு வரை இங்கு பெண்களுக்கு கல்வி தேவையென வலியுறுத்தப்பட்டது.

''கல்வி யழகே அழகு (14 கலி 1)

பெண்களின் கல்வி அளவுக்கும் முக்கியத்துவம் இருந்தது. மனைக்கு அடிப்படை ஆதாரம் பெண்களே விருப்பம் இல்லாத பெண்களிடம் ஆண்கள் இன்பம் துய்ப்பது கொடுமை (திரிகடுகம் 5) எனக் கூறுகிறது. விருந்தோம்பல் பெண்ணின் தலையாய இல்லற கடமையாகும்.

பெண்ணின் கற்பைக் காத்து நிற்பவன் கணவன் என்று கூறப்படுகிறது. இன்னும் பிற இலக்கியங்களிலும் பெண்களின் பண்புகள் அமைகின்றது.

### முடிவுரை

பெண் மென்மையானவள், மக்கட்பேற்றிற்கு இன்றியமையாதவள், ஆடவனின் அன்பிற்குரியவள், அறியாமை கொண்டவள், பொறுமை நிறைந்தவள் எனும் கணிப்பில் அவளைப் பாதுகாத்தலைத் தமது பொறுப்பாக ஆடவர் கருதினர். எனவே அன்பாலும், பரிவாலும், பெண்டிரைத் தம் ஆளுகைக்கு உட்படுத்தினர். அதன் நிலைபேற்றிற்காகக் கடமைகளையும், வரையறுத்தனர் என்பது சங்க இலக்கியத்தை நோக்க எழும் பெண்ணிய உணர்வாகும்.

கணவனே கண்கண்ட தெய்வம், கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்ற பிற்காலச் சமூக அமைப்பிற்கான வித்தும், அடித்தளமும், சங்கச் சமூகத்தில் காணப்படுகின்றன.

நாணம், கற்பு முதலிய செல்வப் பண்புகளும், விருந்தோம்பல், மக்கட்பேறு, கணவனைப் பேணுதல் முதலிய குடும்பச் சிறப்புகளும், வீரம், கல்வி முதலிய சமுதாய நல இயல்புகளும், அமைந்த உருவமாக விளங்கிய பெண்களாகத் திகழ்கின்றனர்.

✪

# நூலகத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்

சாகித்ய அகாதெமி பொறுப்பு அலுவலர் முனைவர் அ.சு.இளங்கோவன்




> செய்தி வழங்கியவர்:
> **அ. அனிதா,**
> முனைவர் பட்ட ஆய்வாளர்,
> அரசு கலைக் கல்லூரி, சேலம் 7.

*சாகித்ய அகாதெமி சார்பில் உலகப் புத்தக நாள் நிகழ்ச்சி சேலம் தமிழ்ச் சங்க அண்ணா நூலக மாடியில் 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.*

*இதில் கலந்துகொண்டு, சென்னையில் உள்ள சாகித்ய அகாதெமி பொறுப்பு அலுவலர் அ.சு.இளங்கோவன் பேசியது:*

ஷேக்ஸ்பியர் பிறந்த தினமும், இறந்த தினமும் ஒன்றாக வந்த தினம் உலக புத்தக தினமாகக் கொண்டாடப்படுகிறது. உலகக் காப்புரிமை தினமும் இதில் அடங்கும். எழுத்தாளர் உரிமைகளைப் பாதுகாக்கும் நாளாக இதைக் கொண்டாடுகிறோம்.

உலகம் முழுவதும் 13 கோடி புத்தகங்கள் வெளியாகி இருக்கின்றன. ஓராண்டுக்கு சுமார் 2 லட்சம் புத்தகங்கள் வெளியாகி இருக்கின்றன.

இந்தியாவில் சாகித்ய அகாதெமி 1954ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கப்பட்டு, எழுத்தாளர்களுக்கு பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இலக்கிய வாய்ப்புகளை மேம்படுத்தி வருவதில் சாகித்ய அகாதெமி முக்கியப் பங்கு வகிக்கிறது.

இன்றைய தலைமுறையினர் இடையே புத்தக வாசிப்பு குறைந்தாகக் கூறுகின்றனர். ஆனால், புத்தக வாசிப்பு அதிகமாகி இருக்கிறது என்றே கூறலாம்.

மின் புத்தகம் மூலம் வாசிப்பு அதிகமாகி இருக்கிறது. ஓலைச்சுவடியில் இருந்து காகிதம், அதைத் தொடர்ந்து கணினி, செல்லிடப்பேசி என தொழில்நுட்பம் வளர்ந்து மின் புத்தக வாசிப்பும் அதிகரித்துள்ளது. தமிழில் வெளியாகும் நூல்களை கனடா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட வெளி நாட்டுவாழ் தமிழர்கள் மின் புத்தகங்கள் மூலம் வாசிக் கின்றனர். எனவே, மின் புத்தக வாசிப்பு அதிகரித்துள்ளது எனலாம். நூல்கள் தகவல் களஞ்சியங்களாக உள்ளன. பள்ளி செல்லாமலேயே புத்தக வாசிப்பு மூலம் எடிசன், மைக்கேல் ஃபாரடே ஆகிய அறிஞர்கள் உருவாகி இருக் கின்றனர்.

அதேபோல, தமிழகத்தில் ஜெயகாந்தன், விந்தன், ம.பொ.சி. ஆகியோர் அச்சுக்கூடத்தில் அச்சுக் கோர்ப்பாளராக இருந்து புத்தகத் துறைக்கு வந்து எழுத்து உலகில் சாதனை படைத்தவர்கள். இதில் ஞானபீட விருது, சாகித்ய அகாதெமி, தமிழக அரசின் விருதுகளைப் பெற்றவர் எழுத்தாளர் ஜெயகாந்தன். பள்ளிப் பாட நூல்களைப் படித்தால் முழு அறிவைப் பெற முடியாது. முன்பெல்லாம் துணைப் பாட நூல்கள் இருந்தன. திருக்குறள், பாரதி, பாரதிதாசன், மு.வ. புத்தகம் மூலம் நல்ல தமிழ் எழுதவும், மிகச் சிறந்த தமிழ் அறிஞராக மாறவும் வாய்ப்பு கிடைக்கும்.

ஒவ்வொரு வீட்டிலும் நூலகத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். இந்தியாவில் உள்ள நூலகங்களில் உள்ள ஒவ்வொரு பிரதியும் கன்னிமாரா நூலகத்துக்கு அனுப்பி வைக்கப் படும். கன்னிமாரா நூலகத்தில் சிறந்த புத்தகங்களை படித்து உயர்ந்தவர்தான் முன்னாள் முதல்வர் அண்ணா என்றார்.

எழுத்தாளர் கு.கணேசன் பேசுகையில், அறிவின் ஆயுதம் நூல்கள். மனிதன் இருளில் இருந்து விடுபடுவதற்கு சூரிய வெளிச்சமே புத்தகம்தான். ஆன்மாவின் உயிர்ப்பு நூல்கள். உலகையே புரட்டிப் போட்ட நூல்களுக்குக் காரணமானவர்கள் காரல் மார்க்ஸ், ஆடம் ஸ்மித் ஆவர். நூல்கள்தான் மனிதனை மனிதனாக வாழ உதவுகின்றன என்றார்.

சாகித்ய அகாதெமி வாழ்க்கை வரலாறு நூல்கள், தொகுப்பு நூல்கள் குறித்து எழுத்தாளர் முனைவர் கு.கணேசன், மொழிபெயர்ப்பு நூல்கள் பற்றி புலவர் இல.வின்சென்ட், வாழ்க்கைக்குப் புத்தகத்தின் பங்கு குறித்து எம்.ஜி.ராஜன், இரா.வேணுகோபாலசுவாமி உள்ளிட்டோர் பேசினர்.

✪

# உச்சரித்து உயர்வோம்

முனைவர் வெ. நல்லதம்பி

ஒரு மொழியின் அழகு அதன் ஒலி வடிவத்திலேயே மிகுதியும் உள்ளது. அந்த ஒலியின் அழகு இன்று ஊடகங்களிலும், மேடையிலும் எந்த நிலையில் உள்ளது?

உண்மையான தமிழ்ப் பற்றாளர்களின் உள்ளத்தில் வேல் பாய்ச்சும் வண்ணம் ஊடகங்களில் குறிப்பாகச் செயற்கைக்கோள் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளில் ஒலி அழகு அதிகமாகச் சிதைந்து வருகிறது. உச்சரிப்புக் கொலை பெருகிய வண்ணம் இருக்கிறது.

அரசுத்துறை வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அவ்வித நிலை அவ்வளவாக இல்லை என்பது சற்று ஆறுதலான விஷயம். அதற்குக் காரணம், அங்கு நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவோரைத் தேர்ந் தெடுக்கையில் அவர்களைக் குரல் தேர்வுக்கு (ஆடிஷன்) வரவழைத்துச் சலித்துப் புடம்போட்டு ஒலிபரப்பில் அனுமதித்திருக்கிறார்கள்.

குரல்தேர்வில் குரலின் தன்மை, குரலின் வயது, குரல் எல்லை, குரலின் சுமைதிறன், குரலின் வேகம் மற்றும் வெளிப்பாடு, குரலின் பொருத்தம், குரலின் நெகிழ்வு, உயிர்மெய் எழுத்துக்களின் உச்சரிப்பு, ஒலி அழுத்தம், மனம் கவர் தன்மை, சரியான மூச்சு விடும் பழக்கம், குரலின் களைப்புத் தன்மை, குரலின் கவர்ச்சி, குரலின் சுவை ஆகிய 16 பொருத்தங்களைப் பார்த்து அரசுத்துறை ஊடக அலுவலர்கள் ஆராய்கிறார்கள். அங்கு கூட அவ்வாறான நிலை போதுமான அளவில் இப்போது இல்லை என்கிறார்கள். மொத்தத்தில் வானொலி, தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவோர், குறிப்பாக நிகழ்ச்சிகளை வழங்கும் 'காம்பியர்கள்' எனப்படும் இணைப்புரையாளர்கள் சகட்டுமேனிக்கு உச்சரிப்புக் கொலையில் ஈடுபடுகிறார்கள். நுனிநா உச்சரிப்பு, தமிங்கிலப் பாணிப்பேச்சு ஆகியவை, காட்சிகளில் காட்டப்படும்

ஆபாசம், வன்முறையை விடவும் அதிகமாக உள்ளன.

மாறுதலாகப் பேசினால்தான் நேயர்களைக் கவர முடியும் என்ற தவறான நினைப்பு, ஆங்கிலம் கலந்த தமிழ்ப் பேச்சால் தம்மை உயர்த்திப் பிடித்துக் கொள்ளலாம் என்ற மனக்கோணல், எப்படிப் பேசினாலும் யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள் என்ற பொறுப்பற்ற சுதந்திர உணர்வு போன்றவைதான் அவர்களை அப்படிப் பேசத் தூண்டுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தால் பலன் கிட்டாதா!

'சட்டியில் இருப்பதுதானே அகப்பையில் வரும்' எனக் கருதிக் கொண்டு, இப்போது கல்விக் கூடங்களிலிருந்து வரும் பெரும்பாலான இளைஞர்களின் உச்சரிப்பு அப்படித்தானே இருக்கிறது என்று நினைத்து நிகழ்ச்சிப் பொறுப்பாளர்களும் தயாரிப்பாளர்களும் வாளா இருந்துவிடும் போக்கு காலப்போக்கில் மொழிச்சிதைவுக்குப் பெருமளவு காரணமாகி விடும்.

நாளுக்கு நாள் பெருகிவரும் தொலைக்காட்சி, வானொலிச் சிறுபெட்டிகள் (டிரான்சிஸ்டர்கள்) அனைத்தும் சேர்ந்து ஊடக நிகழ்ச்சிகளை மக்கள் மத்தியில் எளிதாக எடுத்துச் செல்லும் பாங்கும், தமிழகத்தைப் பொறுத்தவரை ஊடக நிகழ்ச்சிகளின் அடிமைகளது (Addicts) எண்ணிக்கை அதிகரிப்பும் சேர்ந்து, இன்றைய தவறான ஊடக மொழி நிலவரத்தை வளர்த்து வருகின்றன. அப்படிப்பட்ட போக்கு எதிர்காலத் தமிழ் மொழியின் தலை எழுத்தை நிர்ணயிக்கும் நிலையை உறுதி செய்துவிடும் பேராபத்து இருக்கிறது. அதை அனைவரும் உடனே உணர்வது நல்லது.

ஒலி வடிவமும், வரிவடிவமுமான ஒரு மொழியின் அழகு ஒரு பக்கம் இருக்கட்டும். அதன் வாழ்வே அம்மொழி பேசப்படுகிற, உச்சரிக்கப்படுகிற நடைமுறையில்தான் இருக்கிறது. ஒரு காலத்தில் தொடக்கக் கல்வி நிலையிலேயே மொழிப்பாடம் புகட்டும் ஆசிரியர்கள் ஒப்பிட்டுப் படிக்கும் (Oral Reading) பழக்கம், மௌனமாகப் படிக்கும் (Silent Reading) பழக்கம் இரண்டிற்கும் சமமான முக்கியத்துவம் வழங்கித் தமிழ் மொழி வகுப்புகளை நடத்தியிருக்கிறார்கள். அந்நிலை இன்றுள்ளதா?

இல்லையானால் அத்திசையில் நாம் முயற்சி எடுப்பது நல்லது அல்லவா?

அண்மையில் ஓர் இலக்கிய நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு நடுத்தரவயது மனிதர் என்னைச் சந்தித்தார். பேருந்தில் ஏற இருந்த என்னைத் தடுத்து, அவரது சொந்தக் காரில் என்னை என் ஊரில் விடுவதாகப் பணிவுடன் கூறினார். 'நீங்கள் யாரெ'ன்று கேட்டேன். அவரது மறுமொழி மெய்சிலிர்க்க வைத்தது. 'பல ஆண்டுகளுக்கு முன் நீங்கள் தொலைக்காட்சிப் பணியிலிருந்தபோது நிகழ்ச்சியில் வாய்ப்புக் கேட்டுத் தங்களிடம் வந்தேன். உங்கள் சொந்த ஊரைச் சேர்ந்தவன் என்று கூறியும் நீங்கள் எனக்கு வாய்ப்பளிக்க மறுத்தீர்கள்; அதற்குக் காரணம் என் தவறான உச்சரிப்பே என்றீர்கள்! சரியான மொழி உச்சரிப்புடன் மீண்டும் வந்தால் வாய்ப்பளிப்பது குறித்துப் பரிசீலிப்பதாகச் சொன்னீர்கள்' என்றார் அவர்.

அன்று என்னால் உதவி செய்யப்பட முடியாத அந்த மனிதர், இன்று என்னிடம் தானே வலிய வந்து எனக்கு உதவி செய்ய முன்வருவானேன் என்று எண்ணியவாறு அவர் முகத்தையே பார்த்தேன். அவர் தொடர்ந்தார்.

'அன்றிலிருந்து தினமும் கடுமையான உச்சரிப்புப் பயிற்சியில் இறங்கினேன். நண்பர்களிடம் பேசிக் காட்டினேன். ஒரு நண்பர் என் முன்னேற்றத்தைக் கவனித்து விளம்பர அறிவிப்புக் கம்பெனி ஒன்றிடம் என்னை அறிமுகப்படுத்தினார். அதில் ஈடுபட்ட நான் மேலும் வளர்ந்து, இன்று ஓர் மையப் பேருந்து வளாகத்தில் இயங்கும் ஒலி விளம்பர நிறுவனம் ஒன்றிற்கு அதிபராக உள்ளேன். நல்ல வருவாய், சொந்த வீடு, சொந்தக் கார் எல்லாம் உண்டு' என்று முடித்தார். அப்போது அவரின் முன்னேற்றத்தைக் கண்டு நான் பெருமையடைந்தேன். அவர் தனக்குத்தானே முயன்று பெற்றுக்கொண்ட தமிழ் உச்சரிப்பின் பயனை வியந்து பாராட்டினேன்.

✪

Owned Published and Printed by P.Sangamithirai Published from 43/13, Paddy field Road, Perambur, Chennai - 600 011, Printed at J.M. Process, 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai - 600 014. **Editor : Dr. M.Pattazhagan**